24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2014

# கனடிய அரசியல்வாதிகளும் கறுப்பு ஜுலையும்

கனடிய பல்கலாசார, வேலைவாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரான மதிப்பிற்குரிய ஜேசன் கென்னி (Jason Kenney) அவர்கள் 1983 யூலையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனக்கலவரம் பற்றிய நினைவுதினம் தொடர்பாக அறிக்கை ஒன்றை ஜுலை 24, 2014 இல் வெளியிட்டுள்ளார்.



அவ்வறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. முப்பத்தியொரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராக ஜுலை 23 இல் கொழும்பில் தொடங்கிய இனக்கலவரம் விரைவில் நாடு முழுவதும் பரவி பல நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்களது உயிரை எடுத்தும் தமிழர்களது சொத்துக்களையும் அழித்தது.

அன்றில் இருந்து இந்த சோக நிகழ்வை தமிழ்மக்கள் உலகம் முழுவதும் கறுப்பு ஜுலையாக நினைவு கூர்ந்து வருவதுடன் தற்போது இலங்கையில் தமிழர் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் நினைவு கூருகிறார்கள். இலங்கையில் தற்போது நடைபெறும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாகவே கனடா கண்டித்து வருகிறது. அத்துடன் ஊடகவியலாளர்களை தடுத்து வைத்திருத் தல், அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள், மற்றும் புலம் பெயர் தமிழ் மக்களின் உறுப்பினர்களை இலக்கு வைத்து



நடவடிக்கை எடுத்தல் என்பவற்றையும் கனடா கண்டித்து வருகிறது.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை யில் ஜுலை 1983இல் நடைபெற்ற இனக் கலவரத்தை நினைவுகூரும் இவ்வேளையில் நான் பெருமையுடன் கூறிக்கொள்ளவது என்னவென்றால் கனடா தொடர்ந்தும் அடிப் படை சுதந்திரத்தை மதித்தல், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) போன்றவற்றை ஊக்குவிப்பதுடன், அவற்றை தொடர்ந்தும் பின்பற்றியும் வரும் என உறுதிபூண்டுள்ளது என்றார். நாங்கள் கனடாவில் உள்ள 250,000 தமிழ் மக்களுடன் சேர்ந்து இந்த கறுப்பு ஜுலையில் நடைபெற்ற துன்பகர-மான நிகழ்வுகளை நினைவு கூருகின்றோம்.

கனடாவில் எதிர்கட்சித் தலைவரும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான மதிப்பிற்குரிய ரொம் மல்க்கயர் (Tom Mulcair) அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக 1983 ஜுலையில் நடைபெற்ற இனக்கலவரம் பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். புதிய ஜனநாயகக்கட்சி கனடாவில் உள்ள மற்றும் உலகில் உள்ள எல்லா மக்களுடனும் சேர்ந்து இந்த கறுப்பு ஜுலை தினத்தை நினைவு கூருகின்றது.

நூற்றுக்கணக்கான தமிழர் கொல்லப்பட்ட தும் பல ஆயிரக்கணக்கானோர் தமது தொழில் நிறுவனங்களையும், வீடுகளையும் இழந்து இடம் பெயர்ந்ததும் தமிழ் மக்களுக்கு எதிராக ஜுலை 23, 1983 இல் தொடங்கிய இனக்கலவரத்தினால் ஆகும். இதுவரை இந்த கலவரத்தை நடத்தியவர்கள் மீது எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இத்தினத்தை நினைவுகூரும் இவ்வேளை யில் புதிய ஜனநாயகக் கட்சி தமிழர்களது மனித உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்துவதுடன் மனித உரிமை மீறல்களின் மீது விசாரணை நடத்தவும் வலியுறுத்துகின்றது. கனடா விற்கும் உலகில் உள்ள ஏனைய நாடு களுக்கும் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் மனித உரிமைகள் மதிக்கப்படுதலை உறுதிப் படுத்த வேண்டிய கடமை உள்ளது. புதிய ஜனநாயக்கட்சி இலங்கை அரசின் புலம் பெயர்ந்த தமிழ் குழுக்களின் உறுப்பினர் களை இலக்கு வைத்து நடவடிக்கை எடுத்தலை மிகவும் ஆணித்தரமாக கண்டிக்கின்றது. நாங்கள் இந்நிகழ்வை மறக்கமாட்டோம் Lest We Forget.





LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி

Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
BonaFide
"I Work for you Not for the Bank"
Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com







CELEBRATING 25 Years

Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

போட்டி 1
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 2
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

போட்டி 3
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

போட்டி 4
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.


1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# ஐ.நா நிபுணர் குழுவிற்கு எதிராக இலங்கை அரசின் நிபுணர்குழு!

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

## - விகிர்தன் -

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தினால், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. கடந்த 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பணிகள் ஆரம்பமாகியுள்ளதாக ஆணையகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசாங்கமும் ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது. காணாமல்போனவர்கள் தொடர்பாக சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கும், விசாரிப்பதற்குமாக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு குறித்த நிபுணர் குழு ஆலோசனை வழங்கும் என தெரிவிக்கப்பட்டாலும், இது ஐ.நாவின் நிபுணர் குழுவிற்கு எதிராக அல்லது மாற்றாகவே ஜனாதிபியினால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், இந்த நிபுணர் குழுவே மனிதஉரிமை மீறல்கள் குறித்தும் ஆராயும் என பின்னர் வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஓராண்டிற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவினது விசாரணைகளின் அடுத்த கட்டமாக யுத்தத்தின் போது ஏற்பட்ட மக்கள் உயிரிழப்புகள் தொடர்பாகவும் விசாரிக்கும் விதத்தில் ஆணைக்குழுவானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார். இதன்படி, 2009-ம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த உள்நாட்டு யுத்தத்தில் ஏற்பட்ட மக்கள் உயிரிழப்புகளின் போது, இராணுவத்தாலும், விடுதலைப் புலிகளாலும் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் நடந்துள்ளனவா என்று தமது ஆணைக்குழு விசாரிக்கவுள்ளதாகவும் அதற்கும் இந்த நிபுணர் குழு ஆலோசனை வழங்கும் எனவும் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

இதிலே கவனிக்கத் தக்க விடயம் என்னவெனில், நடை- பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பல விடயங்கள் வெளிவந்துள்ள நிலையில் அவை குறித்த சாட்சிகள் ஆவணங்கள் கூட வெளிவந்துள்ள நிலையில் - குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் நடைபெற்றனவா என்பது குறித்து இந்த காணாமல் போனோரின் ஆணைக்குழு ஆராயும். அதற்கு மேற்படி நிபுணர்குழு ஆலோசனை வழங்கும் என்பது தான். காணாமல்போனவர்கள் தொடர்பில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக அமர்வுகளை நடத்தி விசாரணை செய்து வரும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு அவற்றை விசாரணை செய்து, ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பித்து, பின்னர் காணாமல் போனவர்களுக்கு ஒரு முடிவை அறிவிக்க வேண்டும். அதற்கெல்லாம் எவ்வளவு காலம் எடுக்கும்? இந்த நிகழ்ச்சி நிரல் சரியான திசைவழியில் சென்று இறுதிக்கட்டத்தை அடையுமா? என்பதெல்லாம் கேள்விகளாகவே உள்ளன.

இதனடிப்படையில் பார்த்தால், ஐ.நாவின் விசாரணைக் குழுவினை முற்றுமுழுதாக நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் அதற்கான காய்நகர்த்தலை சாதுரியமாக மேற்கொள்ளும் விதமாகவே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள நிபுணர் குழுவில், சர்வதேச சட்ட நிபுணர்களான சேர். டெஸ்மண்ட் டி சில்வா, பேராசிரியர் ஜெ.ஃப்ரி நைஸ் மற்றும் பேராசிரியர் டேவிட் கிரேண் ஆகியோர் அடங்குகின்றனர். ஓரிரு வாரங்களில் அவர்கள் இலங்கை வந்தவுடன் பணிகள் தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஐக்கிய



நாடுகள் மனித உரிமை பேரவையால் இலங்கை தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளதால் அதற்கான மாற்று பொறிமுறை ஒன்றை மனித உரிமைகள் ஆணையகம் அமைத்துள்ளது. மூன்று நாடுகளிலிருந்து இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என சர்வதேச நிபுணர்குழு அறிவித்துள்ளது. இலங்கையில் யுத்தம் நடை- பெற்ற காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையினால் இந்த நிபுணர் குழு அமைக்கப்பட்டதென்பதும், இக்கழுவில் மார்ட்டி அத்திசாரி, சில்வியா கட்ரைட் மற்றும் அஸ்மா ஜஹங்கிர் நியமிக்கப்பட்டுள்ளமையும் தெரிந்ததே.

நியூயோர்க், ஜெனீவா மற்றும் பாங்கொக் ஆகிய நகரங்களில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இவ்வாறு விசாரணை நடத்தப்பட உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நவீன தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்து சாட்சியங்கள் திரட்டப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
சர்வதேச விசாரணைகளில் சாட்சியமளிக்கக் கூடாது என இலங்கையில் எவ்வித சட்டங்களும் கிடையாது என்ற போதிலும், சாட்சியமளிப்போர் தண்டிக்கப்படுவார்கள் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக சாட்சியங்கள் இரகசியமாவே நடைபெறும் நிலைமை தோன்றியுள்ளது. சாட்சியமளிப்போரின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் சாட்சியாளர்களின் பெயர் விபரங்கள் இருபது ஆண்டுகளுக்கு இரகசியமாக பேணப்பட உள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, ஐ.நாவின் விசாரணைக் குழு தமது பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை வரும் நாள் குறித்தும் அதற்கான விசா அனுமதியை வழங்குமாறும் இன்னமும் உத்தியோக பூர்வமாக இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா கோரியதாக தெரியவில்லை. ஆனாலும் இலங்கையில் விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசின் அனுமதி முறைப்படி கோரப்பட உள்ளதாக ஐ.நா தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு கோரப்படும் போதே அரசாங்கத்தின் மறுப்பும் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படும். தற்போது அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினரும் கூறி வரும் கருத்துக்களை விடவும் உத்தியோக பூர்வமாக சொல்லப்படும் அதன் நிராகரிப்பே சர்வதேச நிபுணர் குழுவின் அடுத்த கட்டத்தை - அடுத்த நிகழ்ச்சி நிரலை சரியாக ஒழுங்கு படுத்தும். சர்வதேச நிபுணர் குழுவின் விசாரணைகள் 10 மாதங்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் மாநாட்டில் இவ் விசாரணைக் குழு இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது. அடுத்ததாக எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி எழுத்து மூலமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பல்வேறு அச்சுறுத்தல்கள் - இடையூறுகள்- சிக்கல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஐ.நாவின் விசாரணைக் குழுவிற்கு சாட்சியங்களை வழங்கப் போகின்றவர்கள் பாதிக்கப்பட்ட மிக சாதாரண பொதுமக்களே. இவர்களின் சாட்சியங்களை எவ்வாறு நவீன தொழில் நுட்ப ரீதியாக பெற்றுக்கொள்ள முடியும்? அதற்கான பொறிமுறைகள் என்ன? அதனை இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் யார் ஒழுங்கு படுத்தப் போகின்றார்கள்? அவ்வாறு ஒழுங்கு படுத்தும் போது பரவலாக அவதானிப்பிலிருக்கும் கழுகுக் கண்களிலிருந்து தப்ப முடியுமா? அம்மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது யார்? -இவ்வாறான பல கேள்விகள் எழுகின்றன. எது எவ்வாறெனினும், திட்டமிட்டபடி சர்வதேச குழுவின் பணிகள் முடிவடைந்து குறிப்பிட்ட நாளில் தெளிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இது அடுத்த வருடம் இடம்பெறவிருக்கும் ஐ.நாவின் மனிதஉரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மட்டும் எதிர்பார்க்கலாம்.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# உறவுகள் வேண்டுமா உங்களுக்கு!

உங்கள் வாழ்க்கையில் உறவுகளுக்கு நீங்கள் கொடுக்கும் இடத்தைப் பார்த்தால், உங்கள் வாழ்க்கைத் தரத்தை உறவுகள்தான் நிர்ணயிக்கின்றன என்று நினைக்கத் தோன்றுகிறது.

உங்கள் எல்லா உறவுகளுக்கும் இருப்பது ஒரே ஓர் அடிப்படை தான். அது என்ன தெரியுமா? உங்களுக்கு ஏதோ ஒரு தேவை இருக்கிறது. அந்தத் தேவையை நிறைவேற்றத்தான் உறவுகளை உருவாக்கிக் கொள்கிறீர்கள். உங்களில் சிலர், “இல்லை. நான் என் உறவுகளுக்குத் தருகிற நிலையில் இருக்கிறேனே தவிர, பெறுகிற நிலையில் இல்லை” என்று சொல்லக்கூடும். பெறுவது என்பது ஒரு தேவையின் அடிப்படையில் எப்படி நிகழ்கிறதோ, அதேபோல நீங்கள் தருவது கூட ஒரு தேவையின் அடிப்படையில்தான். யாருக்காவது எதையாவது தரவேண்டுமென்பது, உங்களுக்கிருக்கும் தேவைகளில் ஒன்று.

உறவுகளை நேரடியாகவும் நேர்மையாகவும் கையாளுங்கள்!

எனவே, மனிதர்கள் உறவுகளை உருவாக்கிக்கொள்வதன் பின்னணியில் இருப்பவை, அவர்களுடைய தேவைகள்தான், உடல் தேவைகள் - உள்ளம் சார்ந்த தேவைகள் என்று தேவைகள் பலவிதம். உறவுகளும் பலவிதம். ஒரு தேவை கருதி நீங்கள் உருவாக்கிக் கொள்கிற உறவு, அந்தத் தேவை நிறைவேறாத போது சீர்குலைந்து போகிறது. எனவே உறவுகளைப் பொறுத்தவரை மூடி மறைக்காமல் - சுற்றி வளைக்காமல் நேரடியாகவும், நேர்மையாகவும் கையாள்வது அவசியம்.

மனிதன், தனக்குள் ஒரு முழுமையை உணராதபோது அந்தக் குறையை உறவுகள் மூலம் இட்டு நிரப்ப எண்ணுகிறான். தனக்குள் இருக்கும் எதிர்பார்ப்புகள் அந்த உறவின் மூலம் நிறைவேறாத போது தான் ஏமாந்து போனதாய் ஏங்குகிறான். உண்மையில், உங்கள் வாழ்க்கை தன்னளவிலேயே முழுமையானதுதான். அதனை உணராமல், நீங்கள் உருவாக்கிக் கொள்கிற எதிர்பார்ப்பு கள் உங்களை எங்கெங்கோ, எதை எதையோ தேடவிட்டு, ஏமாந்து போனதாய் வாடவும் விடுகிறது.

கடவுளையே கல்யாணம் செய்து கொண்டால்கூட உங்கள் குறை தீராது

மனிதர்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்புகளின் அளவைப் பாருங்கள். அதை நிறைவேற்றுவது இன்னொரு மனிதருக்கு சாத்தியமே இல்லை. அதுவும் ஆண் பெண் உறவுகளில், உங்கள் எதிர்பார்ப்புகளின் விஸ்தீரணம் எல்லை கடந்து போகிறது. எந்த அளவுக்கென்றால், நீங்கள் கடவுளையே கல்யாணம் செய்து கொண்டால்கூட, கொஞ்ச காலத்தில் அவர் உங்களைக் கைவிட்டு விட்டதாகக் குறைபட்டுக் கொள்வீர்கள். அந்த அளவுக்கு, நிறைவேற்றவே முடியாத எதிர்பார்ப்புகள் மனிதர்களுக்கு உண்டு. ஆனால், அந்த எதிர்பார்ப்புகளுக்கு எது மூலமாகத் திகழ்கிறது என்பதைப் புரிந்துகொண்டால், அற்புதமான உறவை உங்களால் உருவாக்க முடியும். ஒரு உறவைத் தொடங்குகிறபோது எதிர்பார்ப்பு கள் பொதுவானவையாக இருக்கும். ஆனால் வாழ்வின் வெவ்வேறு படிநிலைகளில் எதிர்பார்ப்புகள் வேறுபடக்கூடும். இந்த எதிர்பார்ப்புகள் மனிதர்களிடம் மாறிக் கொண்டே இருப்பதால், அவை ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. இரண்டு பேர்களுக்கிடையே உறவு உருவாகிறதென்றால் ஒரு மனிதர், தன் வாழ்வு முழுக்க ஒரேயொரு எதிர்பார்ப்பை மேற்கொண்டிருக்கக்கூடும். ஆனால் இன்னொருவருக்கோ, வாழ்க்கை குறித்த புரிதலும், அனுபவமும் மாறிக்கொண்டே இருப்பதால், எதிர்பார்ப்பு களும் மாறக்கூடும். இத்தகைய உறவுகள் பெரும் மோதலை ஏற்படுத்தும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

இந்த உலகில் வேறெங்கும் நடக்கிற மோதல்களை விடவும் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நடக்கிற மோதல்கள் தான் அதிகம். ஒரே விடயம் என்னவென்றால் வீட்டுக்குள் குண்டுகள் வீசிக்கொள்வதில்லை. எனவே, உங்களுக்கு அது கேட்பதில்லை. ஆனால், மௌனத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது ஏனென்றால், மனிதர்களின் எதிர்பார்ப்புகள் மாறுகின்றனவே தவிர, அவை ஒரே சீரான வேகத்தில் மாறுவதில்லை.




இன்னொருவரை உங்கள் மகிழ்ச்சிக்குப் பயன்படுத்துகிறீர்கள்!

எனவே, அவற்றை நிர்வகிப்பது, வித்தை காட்டுவது என்றெல்லாம் நீங்கள் தொடங்கினால், அவற்றை நூறு சதம் அனுமானித்து அழகானதோர் உறவை மேற்கொள்வது சாத்தியமே இல்லை. மற்றவர்களின் மனதில் என்ன ஓடுகிறது என்பதை கண்டுபிடித்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவே எப்போதும் முயன்று கொண்டிருந்தால் உங்கள் வாழ்க்கை சிதறிப்போகும். இது முடிவே இல்லாத சர்க்கஸ் காட்சியாக நடக்கும். இதனை ஓர் அளவுக்கு செய்ய வேண்டுமே தவிர மிகச்சிறந்த உறவுக்கு இதுவே அடிப்படை அல்ல.

அடிப்படையில் நீங்கள் ஏன் உறவை நாடுகிறீர்கள்? மகிழ்ச்சியும் ஆனந்தமும் வேண்டும் என்றுதான் உறவுகளைத் தேடுகிறீர்கள். இதையே வேறுவிதமாகச் சொல்வதென்றால், இன்னொரு மனிதனை உங்கள் மகிழ்ச்சிக்கு வழியாகப் பயன்படுத்த முயல்கிறீர்கள். இன்னொருவரை உங்கள் மகிழ்ச்சிக்கு வழியாகப் பயன்படுத்துகிறீர்கள். என்றால் என்ன பொருள்? யாராவது உங்கள் மகிழ்ச்சியைத் தொடங்க வேண்டும். மகிழ்ச்சியை உந்தித் தள்ள வேண்டும், தானாகத் தொடங்காது என்று பொருள்.

## மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள், தேடாதீர்கள்!


மகிழ்ச்சி உங்கள் இயல்பாக இருக்குமானால், உங்களுக்கு உறவுகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தத்தான் தேவைப்படுமே தவிர, மகிழ்ச்சியைத் தேடுவதற்கு அல்ல. உறவுகளை உருவாக்கி இன்னொருவரை கசக்கிப் பிழிந்து நீங்கள் மகிழ்ச்சியைப் பெற முயல்வது சிறிது காலத்திற்கு பிறகு, வலி மிகுந்த உறவாகவே இருக்கும். ஆனால், நீங்களே மகிழ்ச்சிமயமானவராக இருந்து அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக உறவுகளை உருவாக்கினால் யாரும் உங்களைப் பற்றி புகார் சொல்லப்போவதில்லை. ஏனெனில், நீங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறீர்களே தவிர இன்னொருவரிடமிருந்து பெற முயல்வதில்லை.

எனவே, உங்கள் வாழ்க்கையென்பது மகிழ்ச்சியைத் தேடுகிற பயணமாக இல்லாமல், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்குமானால், உங்கள் உறவுகள் இயல்பாகவே அற்புதமாக இருக்கும்.

ஓர் உறவு தேவைப்படுகிற நிலையில்தான் உங்கள் உடல், மனம், உணர்வு, சக்திநிலைகள் உள்ளன. உங்கள் உடல் ஓர் உறவைத் தேடிப்போனால், அது பாலியல் என்று அறியப்படுகிறது. மனம் உறவுகளைத் தேடிப்போனால் அது உறவு நிலை என்று அழைக்கப்படுகிறது. உணர்வுகள் உறவுகளைத் தேடிப்போனால், அது அன்பு என்று அழைக்கப்படுகிறது. உங்கள் சக்தி நிலை உறவுகளைத் தேடிப்போனால், அது யோகா என்று அழைக்கப்படுகிறது.

இன்னொருவரோடு எப்படி இரண்டறக் கலப்பது?

இந்த முயற்சிகள் எல்லாமே ஏதோ ஒன்றோடு இரண்டறக் கலந்துவிடுவதற்காகத்தான். ஏனெனில், ஒருவிதத்தில் நீங்கள் இப்போது இருக்கிற உங்கள் தன்மை உங்களுக்குப் போதுமானதாக இல்லை. இன்னொருவரோடு எப்படி இரண்டறக் கலப்பது? உடலளவில் முயன்றிருக்கிறீர்கள். அது நிகழ்வதுபோல் தோன்றுகிறது. ஆனால் பிரிய நேரிடுகிறது. மனத்தளவில் முயன்றிருக்கிறீர்கள். பலமுறை சேர்ந்துவிட்டதாகவே நினைத்திருக்கிறீர்கள். ஆனால் இரண்டு மனங்கள் ஒருபோதும் ஒன்றாக முடியாது. உணர்வு நிலையில் இரண்டு பேர் ஒன்றாக சங்கமித்துவிட்டதாகப் பலமுறை நினைத்தீர்கள். ஆனால் பிரிவினைக் கோடுகள் மிக எளிதாகத் தோன்றிவிடுகின்றன.



**சத்குரு வாசுதேவ்**

இன்னொருவருடன் ஒன்று சேர்வதனாலேயே அந்த ஏக்கம் நிறைவேறப்போவதில்லை. ஏனெனில், அந்த ஏக்கம் மேலும் மேலும் வளரும். உடல் அளவிலோ, உள்ள அளவிலோ உணர்வுகளின் அளவிலோ அதை நிறைவேற்ற முடியாது. இவை மூன்றையும் நீங்கள் முயன்றிருக்கிறீர்கள். அது ஒரு நெருக்கமான அனுபவத்தை ஏற்படுத்துகிறதே தவிர ஒன்று கலக்கச் செய்வதில்லை. அந்த ஏக்கம் நீடிக்கிறது. அந்த ஏக்கமே சிலருக்கு இனிக்கிறது. அந்த ஏக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறார்கள். ஆனாலும் அந்த ஏக்கம், ஏதோ ஒரு நாள் நிறைவேற வேண்டும்.

உங்கள் வாழ்வில் சில நேரம் இதை நீங்கள் உணர்ந்திருக்கக் கூடும். மிக ஆனந்தமாகவோ, அன்பாகவோ, பரவசமாகவோ, நீங்கள் உணர்ந்திருந்து உங்கள் சக்தி நிலை ததும்பிக் கொண்டிருக்கும்போது உங்கள் தன்மை விரிவடைவதை உணர்வீர்கள். “நீங்கள்” என்று அழைக்கப்படுவது என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

உறவுகள் என்றால் என்ன?

“இது நான். இது நான் இல்லை” என்று நீங்கள் உணர்வதற்கு எது அடிப்படை? உங்கள் உணர்ச்சிதான் அடிப்படை. உங்கள் உணர்ச்சி வளையத்திற்கு உட்பட்டவை அனைத்தையும், நீங்கள் என்று உணர்கிறீர்கள். உங்கள் உணர்ச்சி வளையத்திற்கு வெளியே இருப்பவற்றை வேறொன்று என உணர்கிறீர்கள். உங்களிடமிருந்து அன்னியமாய் வேறொன்று என்பது, எப்போதுமே நரகமாகத்தான் இருக்கும். எனவே, இதுதான் காரணம். நரகத்தை நீங்கள் அனுபவிக்க விரும்பாத காரணத்தால் மனித குலத்தின் ஒரு சிறு பகுதியையேனும், உங்களில் ஒரு பாகமாக உணர விரும்புகிறீர்கள். இன்னொருவரையோ, இன்னொன்றையோ உங்கள் பாகமாக உணர விரும்புகிற ஏக்கத்திற்குத்தான் உறவுகள் என்று பெயர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது!



- நல்ல ரேட்ல மோட்கேஜ் எடுக்க. ,
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க..
- ரீபைனான்ஸ் செய்ய ..,
- எல்லா கடனையும் ஒரே பேமென்டா மாத்த ..
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க ..
- பாங்க்ரப்சி, பவர் ஒப் சேல் நிலைமையில தீர்வு காண.. ,
- வீட்டை வாடகைக்கு விட , பெற்றுகொள்ள

அழையுங்கள் : 416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**

உங்கள் விற்பனைக்
கொமிசனை நீங்களே தீர்மானிக்கலாம்.
எமது மிகக் குறைந்த
**விற்பனைக் கொமிசன்**
**$1000 மட்டுமே!!!**

WIN UP TO
**$100,000***
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

எங்கள் முகவரி :

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

*Listing commission does not include buyer brokerage commission of 2.5%

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
Corporate Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232
#1 Brokerage in Toronto*

# எண்ணெய் வார்க்கப்படும் இனவாத நெருப்பு!

**- ஆதித்தன் -**

## தாயக மடல்

இலங்கை ஜனாதிபதி அடிக்கடி கூறிவரும் ஒரு விடயம் "இலங்கை ஒரே நாடு - ஒரே மக்கள். இந்த நாட்டில் இனவாத்திற்கு இடமில்லை" என்பதாகும். பல மேடைகளில் அவர் இவ்வாறு கூறி வருகின்றார். சந்தர்ப்பம் கிடைக்கும் போது தமிழ் மொழியிலும் இந்த வாசகத்தை அவர் குறிப்பிடுவதுண்டு. ஆனால் இலங்கையில் நாளுக்கு நாள் இனவாதச் சிந்தனைகள் மேலோங்கி வளர்ந்து செல்கின்றதை அவரால் கண்டுகொள்ள முடிந்தாலும் தடுக்க முடியவில்லை. இன்று இலங்கையில் இனவாதம் பேசுகிறவர்கள் எதிர்க்கட்சிகளிலுள்ளவர்கள் அல்ல. அரசில் அங்கம் வகிப்பவர்களே இவ்வாறு இனவாதம் பேசுகின்றனர். சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் ஊட்டப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றது. அது தணியாமல் கொழுந்து விட்டெரிய அடிக்கடி அரசியல்வாதிகளால் எண்ணெய் வார்க்கப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதமே சிங்கள மக்கள் மத்தியில் உசுப்பேற்றக் கூடிய ஒரு வழிமுறை என்பதாக அவர்கள் நினைக்கின்றார்கள். இவ்வாறு உசுப்பேற்றுவதன் மூலம் அவர்களின் வாக்குகளை தக்கவைத்துக் கொள்வதுதான் அவர்களில் முக்கியமான நோக்கம். அரச தரப்பின் இனவாதத் தூண்டல்களுக்கு வேறு எந்தவொரு காரணங்களும் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

சில சமயங்களில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை காண வேண்டும் என எதிர்கட்சிகள் கருத்து வெளியிட்டால் கூட அவர்கள் நாட்டைப் பிரிக்க முற்படுகின்றார்கள் - நாட்டை கூறுபோட சதி செய்யும் வெளிநாட்டு சக்திகளின் ஆட்களாக செயற்படுகின்றார்கள் என்றெல்லாம் கூக்குரலிட்டு சிங்கள மக்கள் மத்தியில் அவர்களை தேசத் துரோகிகளாக காட்ட ஆளும் தரப்பினர் முற்படுகின்றனர் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்காமல் இழுத்தடிக்கவும்- எதிர்க்கட்சிகளை செயலிழக்கச் செய்யவும்- நாடு முழுவதும் இன்று நிலவும் அடிப்படையான மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் இழுத்தடிக்கவும் - எல்லாவற்றிற்குமாக தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கருத்துக்கள் ஒரு பொறிமுறையாக்கப்பட்டுள்ளது. போர் வெற்றியின் பெருமிதத்தை ஐந்தாண்டுகளின் பின்னரும் அதன் சூடு ஆறாமல் இன்னமும் பேணி வருகின்றது அரசாங்கம். போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள், அதற்கான விசாரணைகள் என்று இன்று சர்வதேச ரீதியாக வந்துள்ள நெருக்கடிகளைக் கூட சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு சாதகமாகவே ஆளும் தரப்பினர் பயன்படுத்தி வருகின்றமையினையும் நன்கு அவதானிக்க முடிகின்றது.

போர் முடிக்கப்பட்டு விட்டது. ஆனால், தினசரி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றமையை தடுக்க முடியாத நிலை தோன்றி வருகின்றது. தமிழ் பிரதேசங்களில் முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற போரும் அதன் விளைவுகளும், போர் முடித்து வைக்கப்பட்ட விதமும் மறப்பதற்கில்லை. எவ்வாறாயினும், குண்டுச் சத்தங்களும், தோட்டாக்களின் சீறல்களும் ஓய்ந்து விட்ட சூழலில் ஒரு ஆறுதலான வாழ்க்கையை நோக்கிப் பயணிக்கவே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். நடந்து முடிந்த பிரச்சினைகளை ஒரு விதத்தில் மறக்க முற்பட்டாலும் கூட இப்போது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் காரியங்கள் தமிழ் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமைந்துள்ளது. உதாரணத்திற்கு காணாமல்போனவர்களைத் தேடித் தருமாறு பதிவுகளிலும், கவனயீர்ப்பு போராட்டங்களிலும் ஒரு புறம் தமிழ் மக்கள் அலைக்கழிந்து கொண்டிருக்க - புதிதாக, காணிகள் சுவீகரிப்பு என்ற ஒரு பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. போரின் பின்னால் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரு புதிய பிரச்சினையாகவே இதனைப் பார்க்கலாம், போரின் போது பொதுமக்களின் காணிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டன. அதனை தமிழ் மக்கள் ஒரு போர்க்கால சூழ்நிலையாகவே பொறுத்துக் கொண்டனர். ஒரு காலத்தில் அக்காணிகள் மீளவும் தங்களிடம் வரும் என்று அந்த மக்கள் எண்ணியிருந்தனர்.

ஆனால், போர் முடிவுற்ற பின்னர் முக்கியமாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சினை இதுதான். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு ஆறுதலை ஏற்படுத்தியிருப்பதோடு, நம்பிக்கையையும் அரசாங்கம் வளர்த்திருக்க முடியும். ஆனால், நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. ஏற்கனவே படையினரால் சுவீகரிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்ட காணிகள் மக்களிடம் மீளளிக்கப்படாமலுள்ள நிலையில், மேலதிகமாக, காணி சுவீகரிப்புகள் நடைபெற்று வருகின்றன. அண்மைய நாட்களில் காணி சுவீகரிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட காணி அளவீடு செய்யும் நடவடிக்கைகள் பொதுமக்களால் போராட்டங்கள் நடத்தி தடுத்து நிறுத்தப்பட்டு வருகின்றன.

அதாவது, ஏற்கனவே கைப்பற்றப்பட்டு உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ள காணிகளை மீட்பதற்கான போராட்டத்துடன், புதிதாக காணிகள் சுவீகரிக்கப்படுவதை தடுப்பதற்காகவும் போராட வேண்டியுள்ளது. இவ்வாறாக - தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை இலங்கையின் பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மக்களின் கவனிப்பிற்கு கொண்டு செல்ல வேண்டிய ஒரு தேவை இப்போது எற்பட்டுள்ளது. புலிகளை ஒழித்துவிட்டோம் என்று மார்தட்டி, சிங்கள மக்களிடம் முழக்கமிட்டு வரும் ஆளும் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் சமகால பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மனம் கொள்ளாத நிலையில் மீண்டும் சிங்கள மக்கள் மத்தியில் புலிக்கதைகளையே கூறிவருகின்றனர்.

இந்நிலையில், சாதாரண சிங்கள மக்களுக்கு உண்மை நிலவரத்தை கூற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனை யார் செய்வது? தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு சிந்தனை மிக்க சக்திகளால் மட்டுமே இது முடியும். தனியே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இதனை தெற்கில் சென்று மேற்கொள்ள முடியாது. அங்குள்ள சிங்கள முற்போக்கு சக்திகளுடன் இணைந்தே இதனை செய்ய முடியும். சில சிங்கள அமைப்பினர் அடிக்கடி வடக்கிற்கு சென்று நிலைமைகளை அவதானித்து வருகின்றமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அண்மையில் தென்னிலங்கையைச் சேர்ந்த இவ்வாறான முற்போக்கு அமைப்பினர் யாழ்ப்பணத்தில் ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து மேற்கொள்ள முற்பட்டபோது அது தடைசெய்யப்பட்டது. பின்னர் அதனை ஒரு கூட்டமாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தினார்கள். அக்கூட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் உரை நிகழ்த்தும் போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் தேவை குறித்து சுட்டிக்காட்டியதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

அடுத்ததாக- இன்று தமிழ் ஊடகவியலாளர்களை புலிகளாக சித்தரிக்கும் நடவடிக்கைகள் தெற்கில் இடம்பெற்று வருகின்றன. சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற ஊடக கருத்தரங்கு ஒன்றிற்காக வடக்கிலிருந்து பயணித்த தமிழ் ஊடகவியலாளர்கள் ஓமந்தையிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் வழிமறிக்கப்பட்டு, அவர்கள் பயணித்த வாகனத்திலிருந்து சிறு கஞ்சாப் பொதியொன்றையும் படையினர் கண்டுபிடித்தனர். இந்த நாடகத்தை துணிச்சலுடன் குறித்த ஊடகவியலாளர்கள் அங்கு வைத்தே வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் அவர்கள் வீதியில் அமர்ந்து போரட்டம் நடத்தியதால் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் அச்சம் கொண்டு யாழ்ப்பாணத்திற்கே திரும்பிச் செல்லாது கொழும்பிற்கு சென்றபோது, அங்கு அவர்களுக்கு எதிராக ஒரு குழுவினர் கருத்தரங்கு இடம்பெற்ற இடத்திற்கு வெளியே இருந்து ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.

வடக்கிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் புலிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் அவர்களுக்கு கொழும்பில் கருத்தரங்குகளையோ, பயிற்சி வகுப்புகளையோ நடத்தக்கூடாது என்றும் அவர்கள் கோசமிட்டுள்ளனர். இதற்கு முன்னரும் பல தடவைகள் வடக்கிலிருந்து தமிழ் ஊடகவியலளர்கள் தென்பகுதிகளில் நடைபெறும் கருத்தரங்குகளுக்கோ பயிற்சிகளுக்கோ செல்லும்போதும் இவ்வாறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். உதாரணமாக கூறுவதானால் அண்மையில் நீர்கொழும்பில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்விலும் இவர்களுக்கு எதிராக குழுவொன்று ஆர்ப்பாட்டத்திலீடுபட்டது. அதற்கு முன்னராக தெற்கில் தம்புள்ளயில் ஒரு நிகழ்வின் போதும் படையினர் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வந்து சிக்கலை எற்படுத்திருந்தனர். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், இவ்வாறான கருத்தரங்குகள் பயிற்சி வகுப்புகள் போன்றன தனியே தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் நடத்தப்படுவதில்லை. தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களைச் சார்ந்த அனைவருக்கும் பொதுவாகவே இவை நடத்தப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான், தமிழர்கள் என்பதற்காக வடக்கின் ஊடகவியலாளர்கள் தடுக்கப்படுகின்றனர் - அச்சுறுத்தப்படுகின்றனர். இவ்வாறு, தமிழர்கள் என்பதற்காக அவர்களில் அனைத்துத் தரப்பினரும் பயங்கரவாதிகளாக, எதிரிகளாக சித்தரிக்கப்படுகின்ற சூழ்நிலையில் "இலங்கை ஒரே நாடு - ஒரே மக்கள் இந்த நாட்டில் இனவாதத்திற்கு இடமில்லை" என்று மேடைகளில் உதிர்க்கப்படும் வசனங்கள் எவ்வாறு நடைறைச் சாத்தியமானதாகும்?

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Canyon Press Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பிளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**மொழிபெயர்ப்பு சேவை**

- வழக்கறிஞர்கள் அலுவலகம் (***Lawyer's Office***)
- பாடசாலை (***School***)
- வைத்தியசாலை / வைத்தியர் அலுவலகம் (***Hospital / Doctor's office***)
- சமூக நல உதவி அலுவலகம் ***(Social Assistant Office) (OW)***
- ஒன்ராறியோ ஊனமுற்றோர் உதவி திட்டம் ***(ODSP Appointment)***
- ***Wheel Trans Interview***

பல வருட அனுபவமிக்க மொழி பெயர்ப்பாளர்களால் சேவைகள் வழங்கப்படும்.

**விஜயா குலா: *416.840.4425***

# ரொறொன்ரோ பெரும்பாக அடுக்குமாடி மனைகள் பற்றிய சில தகவல்கள் -*GTA CONDOS*

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 420

பிறயன் ரக்கி (Bryan Tuckey) என்பவர் BILD (Building Industry and Land Development Association) இன் இன்றைய தலைவர் ஆவர். இவர் உள்ளூராட்சி, நகர, பெரும்பாகம் மற்றும் மாகாண அரசுகளிற்காக தொழில் புரிந்தவர். இவரின் அண்மைய அடுக்குமாடிகள் பற்றிய சில தகவல்கள் இங்கே தரப்படுகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு நிலத்தினதும் கட்டிடங்களினதும் அபிவிருத்தி (Land & Buildings Development) முக்கிய பங்களிக்கின்றது. ஆனால் இந்த நிர்வாகப்பகுதி மிகவும் சிக்கலானது. பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன. ஒன்ராரியோ மாகாணத்தின் பொதுமக்களின் குடியிருப்பு சம்பந்தமான கொள்கை, அபிவிருத்திகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்தக் கொள்கையால் குடியிருப்பு சம்பந்தமான பகுதியும், குடியிருப்பிற்காக தெரிவு செய்யப்படும். நிலத்தின் அளவும் (size) தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையால் மாகாணத்தின் சில பகுதி யில் புதிய குடியிருப்பு அல்லது கட்டிடப் பகுதிகள் நிர்மாணிக்கப்படுவது முற்றாக தவிர்க்கப்பட்டுள்ளது. (Greenbelt Area)

குடியிருப்பிற்கான நிலப்பகுதியின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதால் உயரம் குறைந்த வீடுகள் (Low rise), தனிவீடுகள் (detach), இரண்டு சேர்ந்த வீடுகள் (semi detach), பல சேர்ந்த வீடுகள் (town homes) போன்றவை நிர்மாணிப்பதற்கு நிலத்தின் அளவு குறைந்துள்ளது. இதனால் low rise இற்குரிய supply மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கோரிக்கை ( demand) உள்ள மாதிரி அல்லது அதிகமாகக் காணப்படு கின்றது. இதுவும் low rise வீடுகளின் விலை அதிகரிப்பிற்கு காரணமாகலாம்.



ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) மக்கள் தொகை வருடாவருடம் 100,000 இனால் அதிகரிக்கின்றது. அதனுடன் 50,000 தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்படு கின்றன. இந்த தேவையை சரி செய்வதற்கு குறைந்தது 35,000 புதிய வீடு / மனைகள் உருவாக்கப்பட வேண்டும். இதனை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக அடுக்கு மாடி மனைகளே கட்டப்படுகின்றன. வட அமெரிக்காவின் அடுக்குமாடிகளின் தலை நகரமாக GTA அழைக்கப்படுகின்றது. ஏறக்குறைய 250 புதிய அடுக்குமாடி மனைக்கட்டிடத்தொகுதிகள் நிர்மாணத்தில் உள்ளது. கடந்த நாலு வருடங்களில் விற்கப்படும் புதிய ஆதனத்தில் 50% அடுக்குமாடி மனைகளாகவே காணப்படுகின்றது.

பொதுவில் ஒவ்வொரு புதிய கட்டிடத் தொகுதியும் ஆரம்பிக்கப்படும்போதும் ஏறக்குறைய 500 புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த தொழில் வாய்ப்புகள் பொதுவாக planning, designing, marketing போன்றவை ஆகும். புதிதாக நிர்மாணம் செய்யும் கட்டிடத் தொகுதியில் புதிதாக உருவாக்கிய சட்ட திட்டங்கள், புதுவகையான தொழில் நுட்பங்கள் பாவிக்கப்படுகின்றன. இவ்வாறான புதிய நவீன அறிமுகத்திறனால் Ontario building code பலவிதமான பரிசில்களை (awards) உலகளாவிய ரீதியில் பெற்றுள்ளது.

இதுவரை ஜனவரிகளில்; 2014 ஜனவரியே ஆகக்கூடிய அடுக்குமாடி மனைகளை விற்ற மாதமாக கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வருட ஜனவரி மாத குளிரும், அதிக பனி கொட்டியதும், டிசெம்பர் இறுதியில் ஏற்பட்ட அனர்த்தங்களும் மறக்கமுடியாத அளவிற்கு கடுமையாக இருந்ததும் அறிந்ததே. இன்றைய விலையில் low rise இன் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகவே தெரிகின்றது. எனவே சாதாரணமாக முதல் தடவை வாங்குபவர்களிற்கு அடுக்குமாடி மனைகளே ஒரு வழிப்பாதையாக இருக்கலாம்? போலத்தான் தோன்றுகிறது.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated


"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran,* P.Eng.
*Broker / Owner*

*5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969*

**HOUSE FOR SALE**
**Brimly & Sheppard**
• Brand new (never lived)



• 5 bedrooms house for sale.
• 5 washrooms,
• Custom built on 70' frontage over 3500 sf.
• Stylish kitchen.

**HOTEL FOR SALE**
* 78 Renovated rooms
* Brand Name
* Location: GTA
* Revenue: Over $1.5 Million
• Asking $6.5Million

**GAS STATION FOR SALE**
* Brand new gas station.
* 1 Hour & 15 min. from Scarborough on HWY 12
* Brand name
* 6 Pumps
* TimHorton (rental income)
**Asking $3.45 Million**

**HOTEL FOR SALE**
* Brand Name Hotel
* 1 ½ hour from Mississauga
* 60 Rooms
* Resonable Rate
* Income over $1Million Income
**Asking price**
**$1.5 Million**

**COMMERCIAL UNITS FOR SALE**
Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**SPACE AVAIL. FOR DENTAL OFFICE**
1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - Middlefield & Finch. Dedicated underground parking & locker included.

**CONDO. FOR RENT**
**HWY 427 & Dundas**
Brand new TRIDEL Condo. 2 Bedrooms, 2 Washrooms. swmming pool, Rec. room, 24 hrs. security, Vacant

**HOUSE FOR RENT**
**BELLAMY ELLESMERE**
2 Bedrooms + 1 Bedroom Bungalow house for rent. 2 kitchen, 2 washroom, Bsmt sep. entrance. Avail. September 01, 2014.

# 2014 பொதுநலவாய விளையாட்டு விழா

20 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா ஸ்கொட்லாந்தின் க்ளஸ்கோவிலுள்ள ஷெல்டிக் பார்க் பகுதியில் மிகவும் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

71 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆயிரக்கணக்கான மெய்வல்லுநர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். பொதுநலவாய விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வை 40,000 மக்கள் நேரடியாகவும் தொலைகாட்சி ஊடாக ஒரு பில்லியன் மக்களும் கண்டு களித்துள்ளனர். 2,000 பேர்



பங்கேற்ற நேரடி நிகழ்ச்சியை தொடர்ந்து விளையாட்டரங்கில் பாரம்பரிய அணி வகுப்பும் இடம்பெற்றுள்ளது.

பொதுநலவாய விளையாட்டு விழாவிற்கான கோலில் இருந்த தனது செய்தியை வாசித்து பிரித்தானிய மகாராணி போட்டி களை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் பொதுநலவாய போட்டிகளுக்கான தலைவரான எலிசபெத் மகாராணி போட்டிகளில் பங்கேற்கவுள்ள மெய்வல்லுநர்களுக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய போட்டிகளுக்கான மகாராணியாரின் செய்தியை தாங்கிய கோல் பொதுநலவாய நாடுகளில் 288 நாட்கள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மைல் தூரம் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஜுலை 24 ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவில் 17 வகையான போட்டிகளில் சுமார் 4,500 மெய்வல்லுநர்கள் பங்கேற்கவுள்ளனர். கிளாஸ்கோ நகரம், இதுவரை காணாத மிகப்பெரிய மற்றும் மிகச்சிறந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துமென சேர் கிறிஸ் ஹோய் தெரிவித்துள்ளார். சேர் கிறிஸ், ஸ்கொட்லாந்தின் சார்பில் ஆறு ஒலிம்பிக் பதக்கங்களை வென்று இருதடவை கள் பொதுநலவாய சம்பியன் பட்டத்தை சுவீகரித்தவர். அவர் பொதுநலவாய போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்ச்சிகளுக்கு முன்னர் கருத்து வெளியிட்டார்.


## தங்க பதக்கங்களில் முன்னிலை வகிக்கும் அவுஸ்திரேலியா

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெறும் 20 ஆவது விளையாட்டுப் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலிய தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. 30 தங்கம், 25 வெள்ளி, 32 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 87 பதக்கங்களைப் பெற்றுள்ள அவுஸ்திரேலியா பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது. 27 தங்கம், 24 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள இங்கிலாந்து இரண்டாவது இடத்தையும் 13 தங்கம், 8 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள ஸ்கொட்லாந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. தலா 9 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள தென் ஆபிரிக்கா மற்றும் கனடா ஆகியன முறையே நான்காவது மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றுள்ளன. 8 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள நியூசிலாந்து ஆறாம் இடத்தையும் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள இந்தியா ஏழாம் இடத்தையும் பிடித்துள்ளன.

# விளையாட்டுத் தகவல்கள் 353

## பொதுநலவாய போட்டி: 13 வயது சிறுமி உலக சாதனை

பொதுநலவாய போட்டிகளின் பாரா பிரிவிலான நீச்சலில் மிக இளம் வயதில் பதக்கம் வென்றவர் என்ற புதிய சாதனையை, ஸ்காட்லாந்தின் எர்ரெய்ட் டேவிஸ் நிகழ்த்தியுள்ளார். இவரின் வயது 13 ஆகும். பாடசாலையில் படித்து வரும் இவர், 100 மீட்டர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் வெண்கலம் வென்றார். பொதுநலவாய விளையாட்டில் பங்கேற்ற நீச்சல் குளத்தை விட 3 மடங்கு சிறிய நீச்சல் குளத்தில் பயிற்சி பெற்று எர்ரெய்ட் சாதனை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்பாராத இந்த வெற்றியினால் தான் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக சிறுமி தெரிவித்துள்ளார். உள்ளூர் ரசிகர்களின் உற்சாகக் குரல் என்னை மேலும் வேகமாக நீச்சல் அடிக்கத் தூண்டியது' என்றும் குறிப்பிட்டுள்ளார். தனது எதிர்கால லட்சியம் குறித்து அவர் கருத்து வெளியிடுகையில், 'நீச்சல் அடிப்பதை நேசிக்கிறேன். எதிர்காலத்தில் இதுதான் நடக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது. இருப்பினும், 2016 ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க முயற்சிப்பேன்' என்று கூறினார். 16.6 மீற்றர் நீளம் கொண்டுள்ள நீச்சல் குளத்தில் தீவிர பயிற்சி மேற்கொண்டு, இவர் இந்த சாதனயைப் புரிந்துள்ளார். இந்தக் குளத்தில் வாரத்துக்கு 11 மணி நேரம் (சுமார் 27.5 கிலோ மீற்றர் தூரம்) எர்ரெய்ட் பயிற்சி எடுத்ததாக அவரது பயிற்சியாளர் லோரைன் கி∴போர்டு நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



**எஸ். கணேஷ்**




| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |



**Neilson / Mclevin**




3+1 Bedrooms, 4 W Rooms
New Windows, New Paint,
Renovated Kitchen, Renovated Washrooms

**Morningside / Sheppard**




2 Bedrooms, 2 W Rooms
Mattamy Built Freehold In Very
Convenient & Demanded Location

**Kennedy/S.Major Mac**




3 Bedrooms, 3 W Rooms
Stone Elevation, Sutton Model,
Wonderful Large Principle Rooms

**Hoover And 10th**




3 Bedrooms, 3 W Rooms
Fabulous Greenpark Built Detached
Home In High Demand Byers Pond

**Port Union/Rozell**




3 Bedrooms, 4 W Rooms
Professionally/Freshly Painted
Throughout, Hardwd Flrs In Lr/Dr

**Salem/Kingston Rd**




3 Bedrooms, 3 W Rooms
Stunning Modern Open Concept
Shenandoah Model By Heathwood

**Morningside/ Oasis**




3 Bedrooms, 3 W Rooms
Large Breakfast And Family Room,
Walk Out To Deck & Fenced Backyard

**Fincham/16th**




3 Bedrooms, 3 W Rooms
Spacious Principal Rooms , Private
Fenced Yard. Close To All Amenities

**Golden Ave & Fonda**




3 Bedrooms, 3 W Rooms
Newly Renovated Kitchen W/Granite
Counters * Walk To Deck From Kitchen

**Birchmount/Steeles**




3 Bedrooms, 3 W Rooms
Brick Paved Backyard With Fine
Gardening New Reno Bsmt/Washrm

**Sheppard Ave/Rouge River Dr**





3 Bedrooms, 3 W Rooms
Hardwood On Main Floor,
Buyer's Dream House

**10th And Main**




4 Bedrooms, 4 W Rooms
Amazing Family Friendly Home,
Oak Staircase, Gas Fireplace

**Finch Ave/Neilson Rd**




3 Bedrooms, 3 W Rooms
Paradise Home In Convenient
Location, Backs On Green Ravine

**Denison/Middlefield**




4+2 Bedrooms, 4 W Rooms
Walkout Basement Apartment
With Separate Entrance

**Harwood/Williamson**




4 Bedrooms, 3 W Rooms
High End Baseboards And Crown Molding,
Gleaming Oak Hardwood Floors

Sell your home

# FASTER

and more **MONEY**

RE/MAX #1

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

**Direct 416 - 276-1225**

**Your home sold in 30 days or we buy it**



KZG 647-200-5833

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770

Email: esrinathan@yahoo.com

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# JEN BOOK STORE

**Scarborough நகரில் ஒரு புத்தகசோலை**

***Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்**

*JK* **தொடக்கம்** *Gr 12* வரையிலான

அனைத்து பாடப்புத்தகங்கள் **(Text Books)** மற்றும் அனைத்து செயல்நூல்களும் **(Work Books)** மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன.

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம்

**JEN BOOK STORE.**

உங்கள் பிள்ளைகள் **Math, English, Science** ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா? கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




***3001 Markham Road, Unit 21 Scaborough ON***


***TEL: 416.738.8824 / 416.335.1500***

# காலத்தோடு வளரும் கணினிகள் - 50

இதுவரையில் பல பயன்பாட்டு மென் பொருட்களைப் பற்றி உரையாடியிருக் கின்றோம். இவ்வாறான மென்பொருட்கள் உருவாக்கப் பயன்படுத்தப்படும் நிரலாக்க மொழிகளைப் பற்றிக் கவனிப்போம். பாவனை யில் உள்ள நிரலாக்க மொழிகளைப் (Programming Languages) பயன்படுத்தியே இத்தகைய பயன்பாட்டு மென்பொருட்கள் நிரலர்களால் (Programmers) உருவாக்கப் படுகின்றன. நிரலாக்க மொழிகளை அடிப்படையில் கீழ்நிலை நிரலாக்க மொழிகள் (Low Level Programming Languages), உயர்நிலை நிரலாக்க மொழிகள் (High Level Programming Languages) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கீழ்நிலை நிரலாக்க மொழியை மட்டுமே கணினியால் புரிந்து கொள்ள முடியும். கீழ்நிலை நிரலாக்க மொழியில் எல்லாத் தகவல்களும் 0 அல்லது 1 என்ற இரண்டு இலக்கங்களால் உருவான குறியீட்டால் குறிக்கப்படும். இது கணினியின் மொழியாக இருப்பதால் கீழ்நிலை மொழியை இயந்திர மொழி (Machine Language) என்றும் அழைப்போம். இந்த மொழியில் நிரல் (Program) செய்வது என்பது முடியாத காரியம். கணினித் துறைசார் வல்லுநர்களின் பயன்பாட்டிற்கென அசெம்பிளி (Assembly) மொழி உள்ளது. இது 0, 1 என்பவற்றுடன் சில ஆங்கிலச் சொற்களும் சேர்ந்ததான ஒரு மொழியாகும். இது மிகவும் கடினமான ஒரு நிரலாக்க மொழியாகக் கருதப்படுகின்றது.

இதன் பயன்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த மொழி கணினியின் ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரை உள்ளது. இந்த நிரலாக்க மொழி கீழ்நிலைக்கும், உயர்நிலைக்கும் இடைப்பட்ட ஒரு வகையாகக் கருதப்படுகின்றது. நிரலாக்கப் பணிகளில் பல்வேறு உயர்நிலை நிரலாக்க மொழிகள் காலத்திற்கு காலம் உருவாக்கப் பட்டு வருகின்றன. கீழ்நிலை நிரலாக்க மொழி கணினிக்கு அண்மையானதாகவும் (Closer to Computer), உயர்நிலை நிரலாக்க மொழி மனிதர்களுக்கு அண்மையான தாகவும் (Closer to Humans) கருதப்படுகின் றது. உலகில் முதலாவதாக வெளிவந்த நிரலாக்க மொழியாக பிளான்கல்குல் (Plankalkul) விளங்குகிறது. இது 1950ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நிரலாக்க மொழி German z3 என்ற கணினிக்காக Konrad Zuse என்பவரால் உருவாக்கப் பட்டது. 1952ஆம் ஆண்டில் Autocode என்ற நிரலாக்க மொழியும், 1955ஆம் ஆண்டு Flow Matic என்ற நிரலாக்க மொழியும், 1956 ஆம் ஆண்டில் IPL (Information Processing Language) என்ற நிரலாக்க மொழியும், 1958 ஆம் ஆண்டில் Fortran (Formula Translator), UBCOL (Universal Computer Oriented Language), IAL (International Algebraic Language) ஆகிய நிரலாக்க மொழிகளும் வெளிவந்தன. Fortran என்ற மொழி இன்றும் Main Frame கணினிகளில் பயன்படுத்தப்படும் பிரபல்யமான மொழியாக உள்ளது. இதன் பயன்பாடு பொறியியல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அதிகமாக உள்ளது. இது ஐபிஎம் (IBM) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டில் LISP (LISt Processing), ALGOL (ALGOrithmic Language), COBOL (COmmon Business Oriented Language) ஆகிய நிரலாக்க மொழிகள் வெளிவந்தன. 1964ஆம் ஆண்டில் BASIC (Beginners All-purpose Symbolic Instruction Code), APL (A Programming Language) ஆகிய நிரலாக்க மொழிகள் வெளிவந்தன. நீண்ட காலத்திற்கு COBOL, BASIC ஆகிய நிரலாக்க மொழிகள் பிரபல்யம் பெற்றிருந்தன. BASIC இன் பல்வேறு வடிவங்கள் மூலம் இந்த நிரலாக்க மொழி வலுப்பெற்று வந்தது. கற்பதற்கு மிகவும் இலகுவான ஒரு நிரலாக்க மொழி யாகவும் BASIC விளங்கியது. பில் கேற்ஸ் (Bill Gates), போல் அலென் (Paul Allen) ஆகியோர் இதன் ஒரு வடிவத்தை உருவாக்கி உலக ரீதியான போட்டியில் பரிசும் பெற்றிருந்தார்கள். 1965ஆம் ஆண்டில் Attribute Grammers என்ற நிரலாக்க மொழியும், 1966ஆம் ஆண்டில் ISWIM (If you see What I Mean), LOGO ஆகிய நிரலாக்க மொழிகளும், 1967ஆம் ஆண்டில் SNOBOL 4 (StroNg oriented symbolic Language) என்ற நிரலாக்க மொழியும் வெளிவந்தன. LOGO சிறுவர்களுக்கு நிரல-ாக்கம் கற்பிக்கப் பயன்படும் ஒரு நிரலாக்க மொழியாகப் பிரபல்யம் பெற்றிருந்தது. 1970ஆம் ஆண்டு Pascal என்ற நிரலாக்க மொழி வெளிவந்தது. உலகப்பிரசித்தி பெற்ற பிளெசி பஸ்கால் (Blaise Pascal) என்ற பிரான்ஸ் தேசத்து கணித நிபுணரின் பெயரை இந்த நிரலாக்க மொழிக்குக் கொடுத்திருந்தார்கள். Pascal பல்கலைக் கழகங்களில் நிரலாக்கம் பற்றிக் கற்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு நிரலாக்க மொழியா-கப் பிரசித்தி பெற்றிருந்தது. இன்றும் பிரசி த்தி பெற்று விளங்கும் C என்ற நிரலா க்க மொழியின் முதல் வடிவம் 1973 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதே காலப்பகுதியில் Prolog என்ற Artificial Intelligence நிரலாக்க மொழியும் SQL என்ற Database Query Language நிரலாக்க மொழியும் வெளி வந்தன. C என்ற நிரலாக்க மொழியின் Object Oriented Version ஆன C++ 1986ஆம் ஆண்டு வெளிவந்தது. 1984ஆம் ஆண்டு Objective C என்ற நிரலாக்க மொழி வெளிவந்தது. இந்த நிரலாக்க மொழி இன்றுவரை நிலைத்திருக்கின்றது.



என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளிவந்துள்ளது என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள். இந்த இந்த நூலினை வாங்கி வாசித்தவர்கள் பகிர்ந்து கொள்ளும் விமர்சனங்கள் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. உங்கள் கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள். இந்த நூலின் பிரதியை வாங்கிக்கொள்ள விரும்புபவர்கள் விளம்பரத்தின் பணிமனையில் வாங்கிக்கொள்ளலாம்.



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஊடக சுதந்திரம்

இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது. கொழும்பில் அமெரிக்கத் தூதரகம் July 28, 2014 இல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த கவலை வெளியிடப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கொன்று கடந்த வார இறுதியில் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்காக அமெரிக்காவின் நிதியுதவியுடன் இந்த பயிற்சி கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பயிற்சி கருத்தரங்கு இரத்துச் செய்யப்பட்ட பின்னர், அதில் கலந்து கொள்ள வந்தவர்கள் மற்றும் கருத்தரங்கு இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் அரசாங்கத்தை விமர்சித்த ஊடகவியலாளர் உட்பட நாடு முழுவதிலும் உள்ள ஏனைய ஊடகவியலாளர்கள் பயமுறுத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இலங்கையில் திட்டமிட்டு செயற்படும் குழுவொன்றின் அச்சுறுத்தல் காரணமாக கடந்த மே மாதம் முதல் இதுவரை இரத்துச் செய்யப்பட்ட மூன்றாது கருத்தரங்கு இதுவாகும். பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்தபோதும் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவில்லை என்பதுடன் அச்சுறுத்தியவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேவேளை 11 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 25 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகள் பற்றிய செய்திகளை சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு தரப்பினரால் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாகவும் நாம் கடும் அதிருப்தியினை வெளியிடுகிறோம். காரைநகர் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினரால் இந்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இலங்கையில் கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரங்களுக்கு தடையேற்படுத்தும் நபர்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை இருப்பது இந்த சம்பவங்கள் மூலம் தெளிவாகியுள்ளது எனவும் அமெரிக்கத் தூதரகத்தின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உறவுகள்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

எனவே, உங்கள் உணர்வு வளையத்திற்குள் இருப்பதையெல்லாம், நீங்கள் என்று கருதுகிறீர்கள். வேறாக நீங்கள் உணர்பவை அனைத்தும் நரகம் என்றால், உங்களில் ஒரு பாகமாக உணர்பவை சொர்க்கமாகத்தான் இருக்கவேண்டும். அந்த சொர்க்கத்தை உங்களுக்குள் உணர்வதற்கு, உறவுகள் இருந்தே தீரவேண்டிய அவசியம் என்ன?

யோகா என்பதே இதுதான். யோகா என்ற சொல்லுக்கு பொருந்துதல் என்று பொருள். ஓர் உறவின் பின்புலத்தில் எந்தவிதமான ஏக்கம் இருந்தாலும் சரி. நீங்கள் உடலளவில் முயன்றாலும் மன அளவில் முயன்றாலும் ஏக்கம்தான் மிஞ்சும். ஒன்று பட்ட உணர்வை நீங்கள் அடையவே முடியாது. ஒருமையின் சில விநாடிகளை உணர்வீர்களே தவிர, அது நிகழாது. உங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் உங்களில் ஒரு பாகமாக உணர்வீர்களே யானால், உங்கள் தன்மையே மிக வித்தியாசமானதாக இருக்கும். இப்போது உறவுகள் எல்லாம் அடுத்தவர்களின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்கான ஒரு வழியாகத்தான் இருக்கும். ஏனெனில் உங்களுக்கென்று தனியாக எந்தத் தேவையும் இராது. உங்களுக்கென்று நிர்ப்பந்தங்கள் இல்லாதபோது நீங்கள் எதையுமே விழிப்புணர்வோடுதான் செய்வீர்கள். ஓர் உறவை உருவாக்கிக் கொள்கிற நிர்ப்பந்தம் உங்களிடம் முடிவடையும் போது விழிப்புணர்வோடுதான் செயல்படுவீர்கள். இப்போது உறவுகள் எல்லாம் உண்மையான ஆசீர்வாதங்களாக விளங்கும். ஏக்கங்கள் இருக்காது. போராட்டங்கள் இருக்காது. உங்கள் உறவுகளை ஆசீர்வாதங்களாய் ஆக்கிக் கொள்வது உங்கள் கைகளில்தான் இருக்கிறது!

### சனல் - 4 ஊடகவியலாளர் கெலும் மெக்ரே ஐநா விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கிறார்!

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆவணப் படங்களை வெளியிட்டு இலங்கைக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்திய சனல் - 4 நிறுவனத்தின் ஊடகவியலாளர் கெலும் மெக்ரே, ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இலங்கை மீதான விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக்குழு தற்போது ஜெனீவாவில் சாட்சியங்களைத் திரட்டி வருகின்றது. இதன்போதே மெக்ரே சாட்சியமளிக்கவுள்ளார் எனவும் இதற்காக லண்டனிலிருந்து அவர் ஜெனீவா செல்லவுள்ளார் எனவும் தெரியவருகின்றது. தமது சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்ட போர்க்குற்ற ஆதாரங்களின் நம்பகத்தன்மை, அதன் பின்னணி உட்பட மேலும் பல விடயங்களை ஐ.நா. விசாரணைக் குழுவின் முன்னிலையில் கெலும் மெக்ரே தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. 'இலங்கையின் கொலைக்களம்', 'யுத்த சூனிய வலயம்' உள்ளிட்ட ஆவணப்படங்கள் மூலம் போர்க் குற்ற ஆதாரங்களை வெளிப்படுத்திய சனல் - 4 குழுவினர், கடந்த நவம்பர் மாதம் பொதுநலவாய மாநாட்டில் செய்தி சேகரிக்க வந்து வடக்குக்குச் சென்ற சமயம், அவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டமையால் அவர்களது பயணம் இடைநடுவில் கைவிடப்பட்டது. மேலும் பல ஆதாரப் படங்கள் வெளியிடப்படும் என கெலும் மெக்ரே அப்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, போர்க்காலத்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளராக செயற்பட்ட எரிக் சொல்ஹெய்மும் ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தயாராகி வருகின்றார்.




ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கடந்த மார்ச் மாதம் 23 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கடந்த 15ஆம் திகதி முதல் இலங்கை மீதான விசாரணையை ஐ.நா. குழு ஒஸ்லோவில் ஆரம்பித்தது. தற்போது இரண்டாம் கட்டமாக அந்த விசாரணை ஜெனீவாவில் நடைபெறுகின்றது. குறிப்பாக, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் வெள்ளைக்கொடி ஏந்தியபடி சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் விவகாரம் பற்றி சாட்சியம் திரட்டுவதில் குறித்த குழு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


**AUM WELLNESS CLINIC IN**

**Healing Massage, Suffering From Pain?**

**Get Relief From:**

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

**Dr. Lata**

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**



மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
நடத்தும்

**வெள்ளிவிழா ஆண்டு ஒன்று கூடலும் விளையாட்டிப் போட்டியும்**

வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு

காலம்: திங்கட்கிழமை, ***August 04th, 2014***
நேரம்: காலை 9:00 மணி
இடம்: ***Milliken Park Area "B" & "C"*** இல்

சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோருக்கான விளையாட்டுக்கள் மற்றும் வினோத உடைப்போட்டியும் நடைபெறும். BBQ மற்றும் சிறப்பான மதியபோசனம் என்பன வழங்கப்படும். மகாஜன்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**அனுமதி முற்றிலும் இலவசம்.**

தொடர்புகளுக்கு: ***416.705.1493 / 647.989.6477 / 416.451.8427***
***www.mahajanan.org***

# சர்வதேச நாணய நிதியத்துக்கு மாற்றாக வரும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா *'BRICS'* வங்கி!

1939ம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப் போர் 1945ம் ஆண்டு செப்ரெம்பர் 2ம் தேதி முடிவுக்கு வந்த நேரம், உலக நாடுகள் பலவும் போரால் சின்னாபின்னமாகி அவற்றின் பொருளாதார நிலைமை சிதில மடைந்து போன நிலை.. உலகமே கூடி ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கியதோடு உலக நாடுகளின் பொருளாதாரத்தை மீட்டு எடுக்கவும் போரால் சேதமடைந்த கட்டமைப்பை மீண்டும் உருவாக்கவும் 1945ம் ஆண்டு டிசம்பரில் உருவாக்கியது தான் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியம் எனப்படும் International Monetary Fund அமைப்பும். 188 உலக நாடுகள் இணைந்து அவரவர் சக்திக்கு ஏற்ப பணத்தைப் போட்டு உருவாக்கியது தான் இந்த வங்கி.




ஆனால், இந்த வங்கிக்கு இதுவரை 12 தலைவர்கள் இருந்துள்ளனர். அவர்கள் அனைவருமே அமெரிக்கர்கள் தான். வங்கியின் தலைமையகம் இருப்பதும் வாஷிங்டனில். ஆரம்பத்தில் உலக வங்கி முழுக்க முழுக்க ஐரோப்பிய நாடுகளுக்கே நிதியுதவி அளித்து வந்தது. பின்னர் ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் ரஷ்யா தனது ஆதிக்கத்தை பரப்ப முயல, ஐரோப்பிய நாடுகளுடன் ஒன்றிணைந்து அமெரிக்கா European Recovery Program என்ற ஒரு புதிய உதவித் திட்டத்தை தொடங்கியது. Marshall Plan என அழைக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்காவே நேரடியாக நிதியுதவி வழங்க ஆரம்பித்தது.

இதையடுத்து தங்களது ஐரோப்பிய கஸ்டமர்கள் அனைவரும் காலியான நிலையில்தான் உலக வங்கி, ஐரோப்பா அல்லாத பிற நாடுகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தது. இதுதான் உலக வங்கியின் 'பழைய வரலாறு'. மேலும் உலக வங்கியிடம் முதன்முதலில் கடன் கேட்டவை பிரான்ஸ், போலந்து, சிலி ஆகிய நாடுகள் தான். இதில் பிரான்சுக்கே முதலில் கடன் தருவோம் என்றார் அப்போதைய உலக வங்கித் தலைவரான அமெரிக்கர் ஜோன் மெக்லாய். அத்தோடு அமெரிக்கா மேலும் ஒரு நிபந்தனையும் விதித்தது. கடன் வேண்டுமென்றால் பிரான்ஸ் அரசில் உள்ள கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் அனைவரையும் நீக்க வேண்டும் என்றது. இதற்கு பிரான்ஸ் ஒப்புக் கொண்டதோடு கம்யூனிஸ்ட்டுகளை கழற்றிவிட்டுவிட்டு கடனை வாங்கிக் கொண்டு போனது. இதுதான் உலக வங்கியின் 'அரசியல் வரலாறு'.

அதேபோல இரண்டாம் உலகப் போருக்குப் பின் சர்வதேச அளவில் நாடுகளின் நிதி செலுத்தும் முறைகளை (International payment system) சீரமைக்க உருவாக்கப் பட்டது தான் சர்வதேச நாணய நிதியம். பெரும்பாலும் ஏற்றுமதி - இறக்குமதியில் அமெரிக்க டொலர்களே புழக்கத்தில் உள்ளதால், டொலர் புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் அமைப்பாகவே இதை இன்னும் பல சோஷலிஸ நாடுகள் பார்க்கின்றன. இதன் தலைமையகமும் வாஷிங்டனில் தான். உலக வங்கியின் தலைவர்களாக அமெரிக்கர்களே இருந்து வருவது போல இந்த அமைப்பின் தலைவர்களாக ஐரோப்பியர்களே இருந்து வருகின்றனர்.

இந்த அமைப்பு சர்வதேச வர்த்தகம், நாடுகளின் டொலர்கள் கையிருப்பு ஆகிய விஷயங்களில் உதவுவதோடு டொலர் பற்றாக்குறையால் தவிக்கும் நாடுகளுக்கு தங்களது இறக்குமதிக்காக கடன் கொடுத்தும் உதவுகிறது. ஆனால், இங்கேயும் கம்யூனிஸ்டுகளை அடக்குகிறோம் என்று கியூபாவை விரட்டிவிட்டனர். அதேபோல சீனாவின் இடத்தை தைவானுக்குத் தந்தனர். ஆனால், சீனா கடும் சண்டை போட்ட பின்னரே மீண்டும் இடம் கிடைத்தது. இவ்வாறாக உலக வங்கியிலும் சர்வதேச நாணய நிதியத்திலும் 188 நாடுகள் இடம் பெற்றிருந்தாலும், இந்த அமைப்புகளின் பெயரில் தான் 'உலகம்', 'சர்வதேச' ஆகிய வார்த்தைகள் உள்ளனவே தவிர, உண்மையில் இவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நலன்களையே மையமாகக் கொண்டு செயல்படுவதாக புகார்கள் உள்ளன. வளர்ந்து வரும் நாடுகள் இந்த அமைப்புகளின் நிதியுதவியை சார்ந்தே இருந்ததால், உலகளவில் அமெரிக்க, ஐரோப்பிய ஆதிக்கம் தடையில்லாமல் பரவியது.

ஆனால், எப்போது சீனாவும், இந்தியாவும், உடைந்து போன சோவியத் யூனியனின் ரஷ்யாவும், பிரேசிலும் தங்களது பொருளாதார சீர்திருத்தங்களில் இறங்கி free economy, market economy என்ற நிலைக்கு வந்தனவோ, அப்போதே அவற்றின் அடிப்படை பொருளாதார நிலைமைகள் மாறி விட்டன. இப்போது இந்த நாடுகளின் சந்தைகளில் விற்பனையை அமெரிக்கா, ஐரோப்பா மாதிரி 'supply - demand' தான் நிர்ணயிக்கிறது. முதலீடு, உற்பத்தி, விற்பனை என்பவற்றை பணமிருந்தால் பொருட்களை வாங்கலாம் அல்லது பொருளின் தேவை அதிகமானால் விலையைக் கூட்டலாம் என்ற கொள்கைதான் நிர்ணயிக்கிறது. இககொள்கையில் அரசு தலையிட மாட்டாது. இதுதான் மார்க்கெட் எக்கானமி. இந்த வகையான பொருளாதாரத்தில் இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென் அமெரிக்கா ஆகியவை இறங்கி தங்களை பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டன.

'ஐயா, எங்கள் மக்களுக்கு சாப்பாடு போட கோதுமை இறக்குமதி செய்யக்கூட காசு இல்லை' என்று உலக வங்கியிடம் கடனும், சர்வதேச நாணய நிதியத்திடம் டொலரும் கேட்ட இந்தியாவின் நிலைமை எல்லாம் மலையேறிவிட்டது. 'நாட்டில் கார்கள் ரொம்ப அதிகமாகி விட்டது. பெட்ரோலியத்தை இறக்குமதி செய்யவும் மக்களுக்கு தங்கம் இறக்குமதி செய்யவுமே எல்லா டொலரும் செலவாகி விட்டது' என்று 'சலிப்பு' எக்கானமி நிலைக்கு வந்துவிட்டது இந்தியா.

## BRICS அமைப்பு

இவ்வாறு பல்லாண்டுகால பஞ்சப்பாட்டில் இருந்து வெளியே வந்த 5 பேரும் (இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென் அமெரிக்கா) இணைந்த கைகளாய் மாறி உருவாக்கிய அமைப்பு தான் பிரிக்ஸ் அமைப்பு (BRICS-Brazil, Russia, India, China, and South Africa). 2006ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் Brazil, Russia, India, China ஆகிய BRIC நாடுகள் மட்டும் இது தொடர்பாக நியூயோர்க்கில் வைத்து பேச்சுவார்த்தையை ஆரம்பித்தன. அப்போது S இல்லை, அதாவது தென் ஆபிரிக்காவை சேர்க்க வில்லை. 2009ம் ஆண்டு ஜூன் மாதம் ரஷ்யாவின் யகாடெரின்பர்க் நகரில் வைத்து பிரிக் அமைப்பை உருவாக்கினர். 2010ம் ஆண்டு தென் ஆபிரிக்காவை இணைத்துக் கொண்டு BRIC அமைப்பு BRICS ஆக விரிந்தது.

உலக மக்கள் தொகையில் பாதிப்பேர் (சுமார் 300 கோடி பேர்) இந்த 5 நாடுகளில் தான் வாழ்கின்றனர். உலகின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 5ல் 1 பங்கு இந்த நாடுகளைச் சார்ந்தது. உலகின் மொத்த வர்த்தகத்தில் 6.14 ட்ரில்லியன் டொலர்கள் இந்த 5 நாடுகளிடையே நடக்கிறது. உலக வர்த்தகத்தில் இது 17 சதவீதம், இந்த 5 பேரும் ஒன்று சேர்ந்தது, உலகின் மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேர் இங்குதான் இருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ள அல்ல. உலகப் பொருளாதாரத்தை அமெரிக்கா- ஐரோப்பாவிடம் இருந்து மீட்டு எடுக்கவே. குறிப்பாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்துக்கு மாற்றாக ஒரு உலகளவிலான மாற்று வங்கியை உருவாக்கவே.

அதைத்தான் July 15, 2014 இல் செய்து காட்டியுள்ளன பிரிக்ஸ் நாடுகள். இந்த 5 நாடுகளும் இணைந்து 50 பில்லியன் டொலரைப் போட்டு ஒரு வங்கியை உருவாக்க ஒப்புக் கொண்டுள்ளன. ஒரு பில்லியன் என்பது சுமார் ரூ. 6,000 கோடி. ஆக, ரூ. 3 லட்சம் கோடியை முதலீடாக வைத்து இந்த வங்கி உருவாக்கப்படவுள்ளது. இந்த முதலீட்டை வருங்காலத்தில் 100 பில்லியன் டொலராக, அதாவது ரூ. 6 லட்சம் கோடியாக உயர்த்தவும் திட்டமிட்டுள்ளன. இவ்வளவு பெரிய பண விவகாரம் என்பதால் முதலில் பிரிக்ஸ் நாடுகள் வங்கியை உருவாக்குவதில் வேகம் எதையும் காட்டவில்லை. ஆனால், பொருளாதார மந்த நிலையில் இருந்து மீண்ட அமெரிக்கா

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Higher Standards
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai

**(Sales Representative)**

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

# இசையால் வசமாகா இதயமேது

இசையின் மூலம் பக்திக்கு மக்களை இசைவிப்பது ஒரு ஜனரஞ்சகமான வழியாகும். மக்களுடன் ஏன் விலங்குகளும் தாவரங்களும் கூட இசைக்கு வசமாகி விடுகின்றன. மதம் கொண்ட வேழமும், நாகமும் இசைக்கு கட்டுப்பட்டு விடுகின்றன. கர்நாடக இசை, துள்ளும் இசை, மேற்கத்திய இசை, ஹிந்துஸ்தானி இசை என்பன மக்களை காந்தம் போல் கவர்ந்து விடுகின்றன. பக்கவாத்திய கருவிகளும் பலவிதமான ஒலிகளை உண்டு பண்ணுகின்றன. பாலகர்கள் முதல் பல் விழுந்த கிழவர் வரை இசையில் மூழ்கி இன்பம் காண்கின்றனர்.

பிரபஞ்ச சக்தி ஒளிவடிவாய், ஒலிவடிவாய் எங்கும் வியாபித்திருக்கின்றது. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பது அப்பர் கருத்தாண்டகம். ஒலியை ஒழுங்குபடுத்தும் போது பிறப்பதுதான் இசை. ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களுள் ஒலியை முறைப்படுத்துகின்ற போது அதிலிருந்து பல்வேறு ராகங்கள் பிறக்கின்றன. நாத வடிவில் இறைவனை உபாசிப்பது ஒருமுறை. நாதமில்லாமல் உலகமில்லை. மொழி என்பது கூட நாத வெளிப்பாடுதான். எழுத்துக்களின் சேர்க்கையே மொழி. பிரபஞ்ச சக்தியில் நாதம் முக்கிய அம்சமாக இருப்பதால் இசையின் மூலம் பிரபஞ்ச சக்தியோடு மனிதன் தன்னை இணைத்துக் கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு ராகமும் மனிதரிடம் ஒருவித உணர்ச்சியை தோற்றுவிக்கின்றது என்பது உண்மையேயாகும். சகான இராகம் இரக்க உணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. பூபாள இராகம் பொழுது புலர்வதை உணர்த்து




கின்றது. கல்யாணி, காம்போதி போன்ற இராகங்கள் மனதை இதப்படுத்தி குளிர்விக்கின்றன. மோகனம் ரசனை உணர்ச்சியை தோற்றுவிக்கின்றது. தர்பார் கம்பீரத்தை ஏற்படுத்துகின்றது. ஹிந்கோளம் பக்திப் பரவசத்திற்கு காரணமாக அமைகின்றது. காபி மனதைத் தென்றலாக வருகின்றது. மேகராகக்குறிஞ்சி, அமிர்த்த வார்சினி என்பன மழையினை வர வழைக்கும் என்று கூறுவர். புன்னாகவராளி நர்த்தனமிட வைக்கும் ராகம்.

பிரபஞ்ச சக்தி என்ற இறை சக்தியை மக்கள் உணர வைத்தவர்கள் சங்கீத விதவான்கள் என்றால் மிகையில்லை. அவர்கள் கையாண்ட இவ்வழி எளிமை யானது மட்டுமல்ல, இனிமையானதும் கூட. ஓசை இசைவடிவம் பெறுகின்றபோது மனித இதயத்தை வருட ஆரம்பித்து விடுகின்றது. இசைக்கு மயங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. இசையை தெய்வ உணர்வுடன் இணைக்கும்போது அது கேட்போரிடம் பக்தியை தோற்றுவிக்கின்ற உபாயமாகி விடுகின்றது. சொற்கள் இசைவடிவில் வெளிப்படும் போது இதயங்களில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. குறிப்பாக பாடுகின்றவர் பக்தி பூர்வமாக பாடும்போது அதன் தாக்கம் மேலும் கூடுதலாகி விடுகின்றது.

தியாகராஜர், முத்துச்சாமி தீர்ச்சிகர், சியாமா சாஸ்திரிகள் சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப்பட்டவர்கள். இவர்கள் மூவரிலும் அதிகமாகப் போற்றப்பட்டவர் தியாகையர் ஆவார். இளம் வயதிலேயே தியாகையர் தனது தாயாரிடமிருந்து சங்கீதத்தைக் கற்றுக் கொண்ட அந்த வயதிலேயே புரந்தரதாசரின் கீர்த்தனங்களை கற்றுத் தேர்ந்தார். பின்னர் சோம்பிவெங்கட ராமணய்யாவின் சிஷ்யர் சங்கீத ஞானம் பெற்றார். அற்புதமான குரல்வளம் இருந்தும் அதனை செல்வம் சேர்க்க அவர் பயன்படுத்தவில்லை. இராம பக்தியை பரப்பும் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதென்று தீர்மானித்தார். சங்கீத உபாசனை செய்து பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தினார். தஞ்சை மகாராசா அளிக்க விரும்பிய விருதுகளைக் கூட ஏற்க மறுத்தார்.

வடநாட்டில் கிருஷ்ண சைதன்னர் கிருஷ்ண பக்தியைப் பரப்பியதைப் போன்று தியாகையர் என்ற தியாகராச சுவாமிகள் தென்னாட்டில் இராமபக்திப் பரவசத்தை ஏற்படுத்தினார். இசைப்பாடல்கள் மூலம் இராமபக்தியைப் பிரபலமடையச் செய்தார். இராம பக்திக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். சமஸ்கிருத மொழியிலும், தாய்மொழியான தெலுங்கு மொழியிலும் இவர் தனது பாடல்களைப் பாடினார். கர்நாடக சங்கீத வளர்ச்சியில் தியாகையரின் பங்கு மகத்தானது.

தெய்வம் எதுவாக இருந்தாலும் பக்தி



நா. க. சிவராமலிங்கம்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
citiCOLLEGE
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

# சர்வதேச நாணய...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

கடந்த ஆண்டு தனது பொருளாதாரத்தை வலுத்தப்படுத்திக் கொள்ளும் திட்டத்தில் ஒரு பகுதியாக தனியார் நிறுவனங்களுக்கு தந்து வந்த அரசு உதவியை நிறுத்தியது. இதையடுத்து அமெரிக்க அரசின் பங்குகளில் முதலீடு செய்ய உலகளவில் போட்டி கிளம்பியது. மாபெரும் முதலீட்டாளர்கள் இந்தியா, ரஷ்யா, பிரேசில் ஆகிய நாடுகளில் பங்குச் சந்தைகளில் செய்திருந்த முதலீடுகளை எல்லாம் திரும்ப எடுத்துக் கொண்டு அமெரிக்கா பக்கம் ஓட, இந்தியா, ரஷ்யா, பிரேசில் பங்குச் சந்தைகள் ஆட்டம் கண்டன.

ஒவ்வொரு முறையும் சர்வதேச நாணய நித-ியத்திடம் ஓடிக் கொண்டே இருக்க வேண்டுமா என்று யோசித்த 5 நாடுகளும் பிரிக்ஸ் வங்கியை உருவாக்குவதை விரைவுபடுத்தின. July 15, 2014 இல் பிரேசிலில் வைத்து இந்த வங்கியின் துவக்கம் அறிவிக்கப்பட்டுவிட்டது. 5 நாடுகளுக்கும் திடீர் திடீரென ஏற்படும் டொலர் பற்றாக்குறைக்கு இந்த 50 பில்லியன் டொலர் இருப்பு பெரும் உதவியாக இருக்கும். மேலும் சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்) இனியும் அமெரிக்கா - ஐரோப்பிய நலன்களை மட்டும் கொண்டு செயல்பட முடியாது. இவர்களிடம் கடன் வாங்கினால் தான் அவர்களுக்கு வட்டி என்ற லாபம் கிடைக்கும். இப்போது இந்த 5 நாடுகளும் தங்களது டொலர் பிரச்சனையை தாங்களே தீர்த்துக் கொண்டு ஐஎம்எப் பக்கம் தலைகாட்டாவிட்டால், அதன் வருமானத்துக்கே பிரச்சனை வரலாம். இதனால் ஐஎம்எப் அமைப்பே மறுசீரமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம். இது அமெரிக்கா-ஐரோப்பா அல்லாத பிற நாடுகளுக்கு பெரும் நலன் பயக்கும்.




இந்த 50 பில்லியன் டொலர் தவிர இந்த 5 நாடுகளும் இணைந்து 100 பில்லியன் டொலர் அவசர கால நிதியையும் (Contingent Reserve Arrangement) உருவாக்க உள்ளன. டொலருக்கு எதிராக ஏதாவது ஒரு நாட்டின் கரன்சியின் மதிப்பு மிக வேகமாக சரியும்போது இந்த அவசரகால நிதி பயன்படுத்தப்படும். பாதிக்கப்பட்ட நாட்டின் கரன்சிகளை இந்த அவசரகால நிதி வாங்கிக் கொண்டு டொலர்களைக் கொடுத்து, அந்த நாட்டின் கரன்சி சரிவை கட்டுப்படுத்தும்.

இதில் 41 பில்லியன் டொலர் சீனாவிடம் இருந்து வரப் போகிறது. உலகிலேயே மிக அதிகமான அமெரிக்க டொலர்களை அன்னிய செலாவணியாக வைத்துள்ள நாடு, அமெரிக்கா அல்ல, சீனா தான் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வளவு பணத்தை அமெரிக்க டொலர் பங்குகளில் போட்டு வைத்துள்ளது. இந்த அவசரகால நிதிக்கு இந்தியா, ரஷ்யா, பிரேசில், ஆகியவை தலா 18 பில்லியன் டொலர்களை வழங்கவுள்ளன. தென் ஆபிரிக்கா 5 பில்லியன் டொலரை முதலீடு செய்யும். சீனா தனக்கு எப்போது தேவைப்பட்டாலும் தான் போட்ட பணத்தில் பாதியை, அதாவது 20.5 பில்லியன் டொலர்களை எடுத்துக் கொள்ளலாம். தென் ஆபிரிக்கா தான் போட்ட பணத்தைப் போல இரு மடங்கு பணத்தை, அதாவது 10 பில்லியன் டொலர்களை எடுத்துக் கொள்ளலாம். இந்தியா, பிரேசில், ரஷ்யா ஆகியவை தாங்கள் போட்ட பணமான 18 பில்லியன் டொலர்களை எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வளவு பெரிய பண விவகாரம், முதலீடு.. இதில் சண்டை வராமல் இருக்குமா?. வந்தது.. குறிப்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தான் பிரச்சனையே வந்தது. யார், யார் எவ்வளவு முதலீடு செய்வது, வங்கியின் தலைமையகம் எங்கே இருக்க வேண்டும், இதன் முதல் தலைவராக யார் இருப்பது என்பதில் இரு நாடுகள் இடையே சிக்கல் நீடித்தது. தலைமையகம் ஷாங்காயில் அமைக்கப்பட வேண்டும் என சீனாவும் டெல்லியில் அமைக்கப்பட வேண்டும் என இந்தியாவும் மல்லுக்கட்டின. அதேபோல 50 பில்லியன் டொலர் என்பதை 5 நாடுகளும், தலா 10 பில்லியன் டொலர் என, சரிசமமாக முதலீடு செய்ய வேண்டும் என்றது இந்தியா. இதில் ஏதாவது ஒரு நாடு (குறிப்பாக சீனா) அதிக நிதியைப் போட்டுவிட்டு வங்கியை தனது கட்டுப்பாட்டில் எடுக்கக் கூடாது என்பதில் இந்தியா தீவிரமாக இருந்தது. இதை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டன. சீனா அதிகம் முதலீடு செய்ய முயன்றது. இந்திய எதிர்ப்பால் அடங்கியது. (முதல்கட்டமாக ஒவ்வொரு நாடும் 2 பில்லியன் டொலர்களை (சுமார் ரூ. 12,000 கோடி) பணமாகவும், 8 பில்லியன் டொலர்களை (ரூ. 48,000 கோடி) வங்கி கேரன்டிகளாகவும் வழங்கும்) இல்லாவிட்டால் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பானிடம் மாட்டிக் கொண்டது மாதிரி இந்த

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


CK TUTORS

Reach For The Top!




Tutoring available for any subject, for any grade

- Functions
- Advance Functions
- Calculus & Vectors
- Data Management
- University (1st year) & College Math

Chemistry, Physics, Biology

Location: McCOWAN & SHEPPARD

Chandru Master (M.Sc. in Math) : 647.628.6494 / 647.350.3956 / 647.869.3956

One to one & Group Classes are Available

Summer Classes July, August மாதங்களில் நடைபெறும்

அனுபவமுள்ள ஆசிரியையினால் தமிழ் வகுப்புக்கள் பாலர் முதல் 8ஆம் தரம் வரை நடத்தப்படுகின்றது

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444 5635 Finch Ave East Unit 2&3 Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# கோப்பி, தேநீர் அதிகம் பாவிப்பதனால் உடல் நிலை பாதிக்கப்படுமா?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இன்று பெரும்பாலும் எல்லோரும் கோப்பி, தேநீர் பாவித்து வருவதை நாம் அறிகின்றோம். இவ்வகைப் பானங்களில் 'கா்ஃபீன்' (caffeine) என்ற ஒருவகை நஞ்சுப் பொருள் உண்டு என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இது ஒருவகை கிளர்ச்சி யூட்டும் தாவர குடும்பத்தைச் சார்ந்ததா கவும் இதுபோன்ற நிலை பல தாவரங்களில் உண்டு எனவும் கூறுகின்றார்கள்.

வடஅமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் 'காஃபீன்' அடங்கிய கோப்பி, தேநீர் பாவிப்பது அதிகம் எனவும் அறிய முடிகின்றது. மேலும் பிற பகுதியில் உள்ள மக்கள் பலவகைத் தாவரங்களைக்கொண்டு கிளர்ச்சியூட்டும் பானங்கள் தயாரித்துப் பயன்படுத்துகின்றார்கள் எனவும் அறிய முடிகின்றது.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் 'மேட' என்னும் ஒருவகையான செடியில் இருந்து 'பானம்' தயாரிக்கின்றார்கள். இதன் இலைகளில் 'காஃபீன்' அதிகளவு உண்டு எனக் கூறப்படுகின்றது. ஆர்ஜன்ரீனாவில் இந்த பானம் பிரசித்தி பெற்றது எனவும் அறியக்கிடக்கின்றது. இந்தியா, ஆபிரிக்கா நாடுகள், மேற்கிந்திய தீவுகளிலும் 'கோலா' (Kola) என்னும் விதையை கிளர்ச்சியூட்டும் தன்மைக்காகத் தங்கள் வாயில் இட்டு மெல்லுவார்கள். மேலும் இலைகளை பிற இடங்களுக்கும் பானங்கள் தயாரிக்க அனுப்பப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

கனடா, அவுஸ்திரேலியா மக்கள் சிலரே கோப்பி, தேநீர் அருந்துவது குறைவு எனவும் அறிய முடிகின்றது. இருந்தும் சில நாட்டு மக்கள் இதனை விரும்பி அருந்துவதும் உண்டு. கனடாவைப் பொறுத்தமட்டில் 7.6 வீதத்தினரும், அவுஸ்திரேலியாவில் 3 சதவீத மக்களும் பாவனைக்கு எடுப்பதாகக் கணக்கிடுகின்றார்கள். ஆனால் இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் ஓரளவு கூடுதலாக பாவிப்பதாக கூறப்படுகின்றது.

உலக மக்களால் அதிகளவு பாவித்து வரும் போதையூட்டும் மருந்துகளில் முதல் இடத்தைப் பெறுவது இந்தக் 'காஃபீன்' ஆகும். மதுபானம், புகையிலை, கஞ்சா போன்றவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'காஃபீன்' முதலாவது இடத்தைப் பெறுவதாகக் கூறப்படுகின்றது. இப்படிப் பார்க்கும் போது கோப்பியிலும், தேநீரிலும் மட்டும்தான் 'காஃபீன்' உள்ளது எனக் கூறமுடியாது. மருந்துகளில் வலிப்பு, சளி போன்றவற்றின் நிவாரண மருந்துகளில் 'காஃபீன்' ஓரளவு கலந்திருக்கும். எனவே சிறியோர் தொடக்கம் முதியவர் வரை அடிக்கடி பாவிக்கும் கோப்பியும், தேநீரும் பொதுவான பானமாக இருந்தாலும் அதன் தீமையை யாரும் உணர்வதில்லை.

பொதுவில் கோப்பி, தேநீரில் உள்ள 'காஃபீன்' நஞ்சுத் தன்மையால் எண்ணற்ற உடல் நலக்கேடுகள், கோளாறுகள் உண்டாகின்றன. இதன் தீமைகளை நாம் அறிந்து கொண்டால் கோப்பி, தேநீர் அதிகம் எடுப்பதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

அதாவது இருதயக் கோளாறு, மனத்தாக்கம், சிறுநீரகம், கணயம், சூலகம், மார்பறை போன்ற பகுதிகளில் புற்றுநோய் உண்டாகலாம் எனவும் அறியமுடிகின்றது.



பெண்களைத் பொறுத்தமட்டில் கருவுற்ற பெண்கள் 'காஃபீன்' நுகர்ச்சி, கோப்பி, தேநீர் அதிகம் பாவிக்கும் பழக்கம் கூடாது எனவும் அப்படிப்பாவிப்பவர்களுக்கு கர்ப்பத்தில் தங்கியுள்ள சிசுவிற்குப் பிறவிக்குறைபாடுகள் ஏற்படலாம் என 'அமெரிக்க உணவு மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம்' கூறியிருப்பதை அறிய முடிகின்றது. எனவே இந்த ஆராய்ச்சியை எப்படி கண்டுள்ளனர் என்பதை நாம் அறிந்து கொண்டால் நாம் அதிகம் பாவிப்பதை ஓரளவு தவிர்த்துக் கொள்ள முடியும் எனக் கருதுகின்றேன். அதாவது ஆராய்ச்சியாளர்கள் எலிகள் சிலவற்றுக்கு நாளாந்தம் கடும் கலவையுள்ள கோப்பியை பருகக் கொடுத்ததினால் எலிக்குப் பிறந்த எலிக்குஞ்சுகளின் உறுப்புக்கள் குறைபாடாக இருந்ததைக் கண்டு கொண்டனர். உ+ம் கால்விரல்கள் போன்றவை. எனவே கர்ப்பகாலத்தில் அளவுக்கு மிஞ்சி தேவை யில்லாமல் கோப்பி, தேநீர் அருந்துவதைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

ஒரு கர்ப்ப மாது தனது வயிற்றில் உள்ள சிசுவிற்கு பிராணவாயு முக்கியம் எனக் கருதல் வேண்டும். பிராணவாயு பற்றாக் குறையாக இருப்பின் மூளைத்திறன் அற்று விடும். ஆதலினால் புகைத்தல், 'காஃபீன்' தன்மையுள்ள பொருட்களை பாவிப்பதை தவிர்த்துக் கொள்வது மிக நன்று.

ஒரு கர்ப்ப மாது தனது வயிற்றில் உள்ள சிசுவிற்கு பிராணவாயு முக்கியம் எனக் கருதல் வேண்டும். பிராணவாயு பற்றாக் குறையாக இருப்பின் மூளைத்திறன் அற்று விடும் எனவும் ஆதலினால் புகைத்தல், 'காஃபீன்' தன்மையுள்ள பொருட்களை பாவிப்பதை தவிர்த்துக் கொள்வது மிக நன்று.

தொடரும்...

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



# இசையால்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மட்டும்தான் அவரது மூச்சாக இருந்தது. சிவன், பிரமா, சக்தி ஆகிய தெய்வங்களைப் பற்றியதும் கீர்த்தனங்களை இயற்றினார். அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய கீர்த்தனைகள் இந்தியா முழுவதும் பரவிவிடவில்லை. காலப்போக்கில் பிற் காலத்தில் வந்தவர்களால் கர்நாடக சங்கீதம் இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் அங்கீகாரம் பெறத் தொடங்கியது. எம்.எஸ் சுப்புலட்சுமி கலாச்சாரத் தூதுவராக உலகில் பல நாடுகளுக்குச் சென்று தியாகையரின் கீர்த்தனைகளை பிரபல்யப்படுத்தினர்.

தியாகையரின் தெலுங்கு கீர்த்தனைகள் அந்த மொழி தெரியாதவர்களையும் பரவசப் படுத்தியிருக்கின்றன. அதற்குக் காரணம் அவரது பாடல்களில் பொங்கித்ததும்பிய பக்திரசனை உணர்ச்சியேயாகும். கல்யாணி ராகத்தில் அவர்பாடிய 'நிதிகால சுகமா' என்ற பாடல் மிகவும் பிரபல்யமானது. 'நீலாயதாட்சி' என்ற கீர்த்தனையும் அற்புதமானது. இந்திய தத்துவது ஞான வரலாற்றில் தியாகையரின் பாத்திரம் இன்றைக்கும் குறிப்பிடத்தக்கதாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வோர் ஆண்டும் மார்கழிமாதம் அவருடைய தியாக பிரம்ம ஆராதனை திருவையாற்றில் உள்ளது. விஜய் தொலைக்காட்சி இந்த வருடம் சென்னையில் திருவையாறு என்ற நிகழ்ச்சியை ஒளிபரப்பி சங்கீதப் பிரியர்களை இசை மழையில் நினைவித்தது.

MALAYSIA GRILL
Malay & Thai Food
HWY 07 & MARKHAM

10% Off
Visa Debit Order Over $20.00
Before tax.
Excluding lunch specials
Expire: September 15, 2014

15% Off
Cash Order over $20.00
before tax.
Excluding Lunch specials.
Expire: September 15, 2014

8 Washington Street, Markham, ON
(Plaza behind Dairy Queen & Tim Hortons)
Malaysiagrill.ca
Contact: 289.554.1128

# கூந்தலுக்கு நாணமுண்டோ?

'நறியவுமுளவோ நான் சொல்லும் பூவே' எனச் சந்தேக நிவிர்த்தி செய்தான் ஒரு பாண்டியன். அதனைத் தீர்த்து வைக்க, இறைவனே அரசசபைக்கு எழுந்தருளினாராம். இங்கே அரசசபை இல்லை. மக்களே தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தைப் பெற்றவர்கள். எனவே கூந்தல் பற்றிய சந்தேகங்கள் மக்கள் முன்னிலையில் வைக்கப்படுகின்றது.

கூந்தலுக்கு ஆயுள் உண்டோ, வளர்த்தி உண்டா நிறம் மாறுவது ஏன்? கழன்று போகும் மயிர் கற்றைகளின் இடத்தில் புதியன தோன்றுகிறதா போன்ற சந்தேகங்கள் மண்டையைப் பிய்க்கின்றன. இதனால் தான் 'மண்டையைப் பிய்க்கின்றது' எனும் சொற்டொர் (Idiom) தோன்றியதோ.

கூந்தல் என்றதும் 'தலைவாரிப் பூச்சூடி உன்னை பாட-சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அண்ணை' எனப் பாடினார் பாரதிதாசன்.

சிரஞ்சீவி என்று சீப்புக்கு ஒரு பெயர் வந்தது. ஒருவேளை சீப்பினால் வார வார தலைமயிர் முளைத்துக் கொண்டே சிரஞ்சீவியாய் வாழ்வதனாலா? மாறுதல் இயற்கை. உலகம் அவசரம் அவசரமாய் இயங்கத் தொடங்கிவிட்டது. முழங்காலைத் தொட்ட கூந்தலும் குறுகிக் குறுகி வருகிறது. அதற்குள்ளும் காலத்துக்கேற்றவாறு நாகரிகமும் மாறுதலடைகிறது.

நடுத்தர வயதை அடையும்போது உடல் தன் வளர்ச்சியை நிறுத்தி இடை பெருத்து, அகன்று ஒசிந்து ஒசிந்து அன்ன நடை, அழகு நடை, நடன நடை என்பன தன் வலிமையை இழக்கிறன. எவ்வளவுதான் முயன்றாலும் முடியாதபடி இடை பெருக்கிறது. இங்கிலிசிலும் மேல்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. ஒரு பெண் எத்தனைதான் முயன்றாலும் இடை அகலுவதைத் தடுக்க முடியாது. 'எப்போது பழைய பாவாடை இறுக்கத் தொடங்குகிறதோ அப்போது அவள் தான் நடுத்தர வயதை அடைந்து விட்டாள் என்பதை அறிய வேண்டும்.

கூந்தல் நிறமும் மாறத் தொடங்கும். அதன் அறிவியல் ரீதியான விளக்கத்தை விஞ்ஞானிகள் தாம் விளக்க வேண்டும். நரைதிரை மூப்பின் அடையாளங்கள்.

சில சமயங்களில் நோய் காரணமாக வைத்தியசாலைகளில் தலைமயிரை வெட்டி விடுவார்கள். கையை உயர்த்தி தலைமயிரை சீவ முடியாதவர்கள் அல்லது நீண்ட நாட்கள் வைத்தியசாலையில் இருந்து தலைமயிரெல்லாம் சிக்கடித்து வாரிப் பின்னமுடியாமல் இருக்கும் போது



தாதிமாரே சிக்காக இருக்கும் தலைமயிரை வெட்டி விடுவார்கள். தலையில் ஓரிரு அங்குல மயிரே இருக்கும். இது ஒரு தொல்லை.

குளிரோ வெப்பமோ மண்டையை நேரடியாக தாக்கும்போது கூந்தலின் வளர்ச்சியும் குறைந்து விடும். பெரிய துர்ப்பாக்கியம் என்னவெனில் மீண்டும் தலைமயிரை வளர்க்க முற்பட்டாலும் அவர்கள் விரும்பிய அளவுக்கு நீளமாக வளர்க்க முடியாமல் ஓரளவில் நின்று விடுகிறது. இதில் எவ்வளவு உண்மையுள்ளது என்றறிய பல மூதாட்டிகளிடம் ஆராய முனைந்த போது மிகக் கவலையுடன் ஒரு 'சிலைட்' போடும் அளவுக்குக் கூட வளராமல் இருக்கிறது. நல்ல நல்ல அழகான சிலைட்களைக் கண்டாலே வாங்கும் பைத்தியம் நான் என்று தெரியும் தானே. சேலைக் கேற்ற நிறத்தில் முத்துக்கள், நிறக்கற்கள் பதித்து வெவ்வேறு வடிவங்களில் வாங்கிய 16 உம் இப்போ கூந்தலிலிருந்து வழுக்கி விழுகிற அளவுக்கு மயிரின் நீளம் குறைந்து விட்டது' என்று அழுதார்.

இதென்ன மயிர் சமாசாரம் என்று விட்டு விட முடியுமா? வள்ளுவர் சொன்னமாதிரி 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்' எனினும் தலைமயிர் மீது கொள்ளும் விசாரம் மிகப் பெரியது. அதனை வளர்க்க, உதிராமல் தடுக்க, நிறமூட்ட என எத்தனை வகை வகையான எண்ணெய்கள், கிறீம்கள், களிகள், கழுவ உதவும் சாம்பூக்கள். 'இது ஒரு மயிர் சாமாசாரம் என ஒதுக்கிவிட முடியாதபடி தலைமயிரும் நம்மைத் தம்வசம் ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

வயது முதிர்ந்த போது சிலருக்கு அடர்த்தியாக முளைத்துக் கொண்டே இருக்கும். அதேவேகத்தில் கழன்று கொண்டுமிருக்கும். வாரும் சீப்பில் கத்தை கத்தையாகக் வெளியேறும். அதேஅளவு முளைத்துக் கொண்டும் இருக்கும். ஆனால் நீளமாக வளர்க்க முயன்றாலும் அது விழுந்து விடும். அதுதான் தலைமயிருக்கு ஆயுள் உண்டோ எனும் கேள்வி எழுகிறது. அது ஒரு நாணமா அல்லது கோபமா அல்லது ஆயுள் கம்மியா பின் மண்டையில் சேர்த்தொரு கிளிப் போடவும் முடியலையே என்று கவலையில் அவர்கள் படும்பாடு? வயதுண்டா நாணமுண்டா எத்தனை விசாரங்கள் எத்தனை மண்டைக்குடைச்சல்கள். பழம் ஏன் மரத்திலிருந்து கீழே விழுகிறது என்ற மனவிசாரம் இன்று வானத்தையே வளைத்துப் போட்டிருக்கிறது. ஒரு வேளை நமது கூந்தல் விசாரங்களும் மயிர் சமாசாரம் என்று ஒதுக்காமல் அரிய கண்டுபிடிபொன்றுக்கு வழி வகுக்கக் கூடும்.

மண்டைத் தோலிலிருந்து ஒரு குரல் கேட்கிறது. பொறுங்கள்! பொறுங்கள்! 'எனக்கும் மானம் ரோசம் வெட்கம் இருக்குது. வேண்டாத நேரத்தில் வெட்டித்தள்ளுவார்களாம் வேண்டும் என்றவுடன் வளர்க்கப் பார்க்கிறார்களாம். உது சரிவராது எனக்கும் சுதந்திரம் வேண்டும். நானும் தன்மானம் காக்க வேண்டும்.'



**- குறமகள்-**

# சர்வதேச நாணய...

**16ஆம் பக்கத்தொடர்ச்சி**

வங்கியும் சீனாவின் கட்டுப்பாட்டில் போயிருக்கும்.

அதேபோல 100 பில்லியன் டொலர் அவசர கால நிதியில் இருந்து சீனா தனக்குத் தேவைப்படும்போது தான் போட்ட பணத்தில் பாதியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னதை இந்தியாவும் பிரேசிலும் ஏற்கவில்லை. ஆனால், சீனா பிடிவாதம் பிடித்ததால் இந்தியாவும் பிரேசிலும் விட்டுக் கொடுத்தன. அதேநேரத்தில் அடுத்த 20 ஆண்டுகளுக்கு சீனாவைச் சேர்ந்த யாருக்கும் வங்கியின் தலைவர் பதவி தரப்படாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இதை சீனா ஏற்றுக் கொண்டது. அதேபோல வங்கியின் தலைமையகம் சீனாவில் அமைக்க இந்தியாவும், முதல் தலைவர் பதவி இந்தியாவுக்குத் தர சீனாவும் ஒப்புக் கொண்டுவிட்டன. இந்தப் பேச்சுவார்த்தைக-ளில் கடைசி நேரம் வரை கூட சிக்கல் தொடர்ந்தது. இதனால் இந்த பிரிக்ஸ் மாநாட்டில் வங்கி உருவாக்கப்படுவதே கூட சந்தேகத்துக்கு இடமானது. ஆனால், கடைசி 10 நிமிடங்களில் இரு தரப்பும் சில விட்டுக் கொடுத்தல்களைச் செய்ய வங்கி வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுவிட்டது. இதற்கான ஒப்பந்தத்தில் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் புடின், சீன அதிபர் ஜி ஜின்பிங், பிரேசில் அதிபர் டில்மியா ரௌ-செப், தென் ஆபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா ஆகியோர் பிரேசிலின் போர்டலேஸா நகரில் கையெழுத்துப் போட்டனர். இந்த வங்கியிலிருந்து உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியைப் பெற முடியும். பல விட்டுக் கொடுத்தல் களுடன் வங்கி உருவாக்கப்பட்டு விட்டாலும் பொருளாதாரத்தில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய நாடான சீனா தனது ஆளுமையை உலகளவில் பரப்ப இந்த வங்கியை நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளும் என்ற அச்சமும் பிற நாடுகளிடம் உள்ளது. காரணம், இந்த பிரிக்ஸ் வங்கியில் பிற நாடுகளும், குறிப்பாக மெக்சிகோ, இந்தோனேஷியா, அர்ஜென்டினா ஆகிய நாடுகள், இணைய அனுமதி அளிக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. (மெக்சிகோ, இந்தோனேஷியா, அர்ஜென்டினா ஆகியவை தங்களது கடன் அளவைக் குறைத்தால் பிரிக்ஸ் வங்கியில் இணைய அனுமதிக்கப் படும்) ஆனால், இதை உருவாக்கிய 5 நாடுகளிடம் தான் நிர்வாகம் இருக்கும். அதாவது மொத்த முதலீட்டில் 55 சதவிதம் எப்போதுமே இந்த 5 நாடுகள் வசமே இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படும். புதிதாக வரும் நாடுகளை வளைக்க சீனா தனது பொருளாதார பலத்தை பயன்படுத்தலாம் என்பது இந்தியாவின் அச்சமாக உள்ளது தனிக்கதை.

இந்த வங்கி தவிர 5 நாடுகளும் இணைந்து பிரிக்ஸ் பங்கு கூட்டமைப்பையும் (BRICS Stock Alliance) உருவாக்கவுள்ளன. இதன்மூலம் சர்வதேச முதலீட்டாளர்கள் இந்த 5 நாடுகளின் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்வது எளிதாக்கப்படும். 2016ம் ஆண்டு முதல் இந்த பிரிக்ஸ் வங்கி செயல்பாட்டுக்கு வரும். இந்த வங்கியை உருவாக்குவதில் மிகத் தீவிரம் காட்டியது ரஷ்ய அதிபர் புடின் தான். அப்படி என்ன ரஷ்யாவுக்கு டொலர் பற்றாக்குறையா என்றால் இல்லை. அந்த நாட்டிடம் சுமார் 500 பில்லியன் டொலர்கள் கையிருப்பு உள்ளது. தினந்தோறும் எண்ணெய் ஏற்றுமதியால் டொலர்கள் குவிந்து கொண்டுள்ளன. ஆனால், அமெரிக்காவுக்கு எதிராக, அமெரிக்காவின் சார்ந்த நிதி அமைப்புகளுக்கு எதிராக ஒரு பலமான எதிர் அணியை உருவாக்குவதே அவரது ஒரே குறிக்கோள். இதைத்தான் செய்து காட்டியுள்ளார் புடின். புடினின் இந்த அரசிய லால் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தான் லாபம் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். தகவல்: Oneindia


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555








# பூத்துக்குலுங்கும் மல்லிகை

முற்றத்து மல்லிகையில் ஆயிரம் அரும்புகள்
சில நாள் கழிகையில்
இலை தெரியா மொட்டுக்கள்
சட்டென்று பூத்த பூக்கள்
மணம் பரப்புகையில்
மனம் பூரிக்கிறது
காலங்கள் மெல்ல மெல்ல ஓடுகிறது
ஒற்றை மல்லிகை இனம் பரப்பி
மல்லிகைத்தோட்டம் ஆகி
ஊரெல்லாம் மணம் வீசுகிறது
பார்க்கும் இடம் எல்லாம் மல்லிகைப்பூக்கள்
அழகோ அழகு கொள்ளை அழகு
ஒரு கணம் உலகை மறந்த ஆனந்தம்
மீண்டும் சுய நினைவுடன் நீளும் நினைவுகள்
மனித இனப்பெருக்கத்தில் எத்தனை கிரியைகள்
எத்தனை ஒன்றுகூடல்கள்



எத்தனை எத்தனை ஆரவாரங்கள்
மறுபுறம்

பிரிவுகள், நோய் நொடிகள், வயோதிபம், தனிமை, இறப்பு
யாவும் மனித வாழ்வில் சாதாரண நிகழ்வுகள்தான்
ஆனாலும்
மனம் ஏற்காவிடிலோ துன்பம்தான்
யதார்த்தம் உணர்ந்தாலோ நிகழ்வுகள் எல்லாம் நாடகக்காட்சிகளே!

- ரஞ்சி கதிர் -





Parkway Mall Mobilicity Summer SALE !!
$50 OFF COUPON
$20/mo
save $5/mo when sign up for a year of service. Life Time Deal. No Contract.
UNLIMITED Talk, Text & Data(+$10)
UNLIMITED Local Calling, Ontario Long Distance
UNLIMITED Text & Picture messaging
UNLIMITED Internet & Mobile-Hotspot(+$10)
FREE Caller ID, Call Waiting, Call Forwarding
Samsung C414 $79.99 $0
Samsung T469 $99.99 $0
Samsung Galaxy Dart $129.99 $39.99
Alcatel OneTouch Evolve $199.99 $59.99
LG Optimus G2x $199.99 $79.99
Samsung Galaxy S4 $649.99 $379.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.

# "மக்கள் சேவையே மகேசன் சேவை"

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உங்கள் பிள்ளை தானே வளரும்

HomeLife
Galaxy Real Estate Ltd., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS

**Kuna Kunathasan**
Sales Representative
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6

DIR : 416-994-3953
BUS: 416-284-5555
FAX: 416-284-5727
kuna.kunathasan@hotmail.com






**Rosebank/Sheppard**
3 Bedrooms,3 Washrooms, Hardwood Main Floor Freshly Painted With Second Floor Family Room. All Brick /Stone Home. Close To Schools, Shopping, Library, Community Center,Transport




**Salem Rd/ Williamson**
3 Bedrooms,4 Washrooms Family Size Eat-in Kitchen, Upgraded Kitchen Cabinets & Stainless Steel Appliances, 2nd Floor Laundry,Walk To Schools, Parks & Shops.




**Lawrence/Bennett**
4 Bedrooms, 2 Washroom, Finished Basement New Kitchen, Laminate Floor Through Out Main Level, Freshly Painted, New Basement Windows. Newer Furnace And Upstairs Windows.




**Steeles / Stains**
3 Bedroom,3 Washroom Backing Onto Ravine Lot. Dble Door Entry. Wood Flrs. Interlocked Drive Way. Main Fl Laundry. Stainless Steel Appliances. Close To Shopping, School, Ttc At Your Door Step.




**Mcnicoll / Middlefield**
3+1 Bedroom,3 Washroom Close To All Amenities, Shops, Transportation, Best Schools, Parks & Recreation, Laminate FloorsThroughout closed toTemples Church / Mosque.




**Bellamy / Lawrance**
3+2 Bedroom, 2 Washroom Ideal For Big Family. Close To All Amenities: Mall, Shops, Schools, Ttc. Lots Of Natural Light. Finished Basement With Two Rooms And 1 Washroom.




**McCowan / Ellesmere**
3 Bedrooms, 2 Washrooms, Huge Lot 50 X 221. Builders Dream For Custom Build, Ravine At The Back, Walk To Creek For Fishing,Deck On Front And Back, Lots Of Shade, Park Like Backyard




**Birchmount / Ellesmere**
3+1Bedrooms / 2 Washroom Upgraded Semi Detached House With Basement Apartment And Seperate Entrance. Newer Furnace, Windows, Roof, Steps ToTtc. Minutes To Hwy401,

NATWEST CAPITAL
TIMES CHANGE. VALUES DON'T

**Mortgage wizard**
Take Advantage Of Our
Free Confidential
Personal Financial Consultation

# நீங்கள் அதிக கட்டணம் செலுத்துகின்றீர்களா?

VERICO MORTGAGE BROKERS NETWORK

- 2nd Mortgage - Up to 90% loan to value starting from 6.99%. No credit check, No income verification, Bad credit & Power of Sale
- உங்களுடைய கடன் அட்டைகளை மற்றும் இதர கடன்களை முற்று முழுதாக அடைக்க வேண்டுமா?
- Commercial Mortgages upto 75% loan value

We're Specialized in Power of Sale & Bank

*இவ் விளம்பரத்தை கொண்டு வந்து எங்களிடம் Mortgage வசதிகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு இலவசமாக "40" TV Or GPS வழங்கப்படும்.
*Some Condition May Apply

(Hiring New Agents)

**Krrish: 416.818.7667**

# OPEN HOUSE @ GTA SQUARE MALL

## ON August 9th, 2014

## From 2:00 pm

FWD condominiums

## in Downtown Toronto




**Wishing a successfull Summer festival in GTA Mall on August 9th & 10th 2014**

## HomeLife / GTA Realty Inc., Brokerage*

**5215 Finch Ave, E, #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

வணக்கம் விளம்பரம் வாசகர்களே!

உடல் வலுக்குன்றியோரும் (Disable Person) வயோதிபரும் (Senior) பாவிக்கும் புதிய முச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு.
***(3 Wheel Scooter)***
தொடர்புகளுக்கு: **416.283.7823**

## திருமண சேவை

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
***647.556.4114 / 416.992.8782***

## TRUCK PARKING

Truck parking space available for rent.
தொடர்புகளுக்கு: 416.568.0686

**விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

## அழையுங்கள்

கல்யாண வீடு, பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள் வைபவங்கள் மற்றும் வேறு பல வைவங்களுக்கு பலகாரம், இனிப்பு வகை, Gift Items செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.291.0156**

விரைவில்..........
விளம்பரம் பத்திரிகையில்
அகணி எழுதும் தொடர்கட்டுரை
''அன்புடைமை''

# ஐம்பூத வெண்பா

## கடவுள் வணக்கம்

ஐந்துகரப் பாவலனே ஐம்பூத வெண்பாவை
எந்தவிதக் கேடுமின்றி ஏழையிவன் - சிந்தைசெய்து
பாடத் தமிழும் பகுத்தறிவும் கற்பனையும்
கூட அருட்கை கொடு.

## அவையடக்கம்

இயற்கையின் சக்திகளை இந்நாள்விஞ் ஞானம்
செயற்கையாய்ப் பாழாக்கும் செய்கை - பயக்கும்
அவலத்தைப் பாட்டில் அளிக்கின்றேன் வாழும்
புவிதன்னைப் போற்றும் புரிந்து.

## நூல்

### 1. நிலம்

நிலமகளே போற்றுகின்றேன் நித்தம்நீ எம்மை
நலமுறவே நற்றாய்போல் தாங்கி - பலவாய
செல்வங்கள் தந்து சிறப்பாக வாழ்வதற்கு
வல்லமையும் ஈவாய் மகிழ்ந்து. (1)

குணமகள்நீ கோள்களிலே கொண்டாடும் நல்ல
மணமகள்நீ வாழ்வதிலே மக்கள் - பணிமகள்நீ
கோமகள்நீ ஆள்வதிலே கும்பிட்டு நின்தாளில்
பாமலர்கள் வைப்பேன் பணிந்து. (2)

(குணமகள் - கோள்கள் பலவற்றில் உயிர்கள் வாழ்வதற்குரிய வாய்ப்பை வழங்குவதால் புவி நல்ல குணமான மகள் எனப்பட்டது.)



ஐயைநீ அத்தன்நீ ஆளுமகா ராணியும்நீ
வையம்நீ காத்தருளி வாழ்வளிக்கும் - தெய்வம்நீ
சூழ்கின்றேன் சூழ்ந்து தொழுகின்றேன் தொல்லையின்றி
வாழ்கின்றேன் மிக்க மகிழ்ந்து. (3)

(ஐயை - தாய். அத்தன் - தந்தை. சூழ்கின்றேன் - உன்னைச் சுற்றிவருகின்றேன்.)

பிறக்கும் உயிரெல்லாம் பின்னர் ஒருநாள்
இறக்கும் எனின்நீயோ என்றும் - சிறக்க
இருப்பாய் உருண்டுயிர்கள் ஏற்றபடி வாழ
விரிப்பாய் வசதிபல வே. (4)

முன்னைத் தவத்தாலே முன்னைப் பொருளானோன்
என்னை இருத்திவிட்டான் உன்மடியில் - மன்னும்
புதுமகளே பொன்னே புவிமகளே தாயே
கதிமகளே நீயெந்தன் கண். (5)


(முன்னைப் பொருளானோன் - இறைவன்.)

அழுக்கான ஆடைகளைத் தோய்க்கும்அறி வாளர்
அழுக்காக்கிச் சூழல் அழகை - பழுதாக்கிக்
கேடு விளைக்கும் பொறுப்பற்ற கீழ்மக்கள்
பாடுகளைப் பார்ப்பாய் பரிந்து. (6)

சிங்கம் எசமானைச் சீறிக் கடித்தல்போல்
தங்க இடம்கொடுத்த தாய்மேனி - பங்கமுற
கீறிக் கிளறிக் கிழிப்பார்க்குப் பூகம்பம்
சீறும் எரிமலைகள் தேர். (7)

(பங்கமுற - கேடுவர.)

சுற்றுப் புறம்தன்னைத் துப்புரவாய் வைத்திருப்பார்
குற்றமில் லாத குடிமக்கள் - மற்றுமவர்
நாட்டில் வைத்திருக்கும் பற்றுணர்வை நல்லவண்ணம்
காட்டும் பொறுப்புணர்வு காண். (8)



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -



# மன இறுக்கம் (Tension)

தினசரி காலைமுதல் மாலைவரை எவரைப்பார்த்தாலும் ஒரே Tension பற்றிய கதையாகவே இருக்கும். முன்பு கடவுள் பற்றிய சிந்தனைகளில் கடவுளரின் பெயர்களை அடிக்கடி உச்சரித்தவர்கள் எல்லோருமே அதிகம் பாவிக்கும் சொல் டென்ஷன் என்பதாகும். Tension என்ற ஆங்கில சொல்லுக்கு பல்வேறு தமிழ்பதங்கள் உள்ளன. அவையாவன அடங்கிய விசையுணர்ச்சி நிலை, மனத்தாக்கலைவு, உள அலைவுநிலை, மனவலி ஆற்றல், மன இறுக்கம் போன்ற பல சொற்பதங்கள் ஆகும். எனினும் Tension என்ற சொல்லில் உள்ள கருத்து தமிழ்பதங்களில் இல்லை. அடிக்கடி மூட் (Mood) என்ற சொல்லைப் பாவிப்பது போல Tension என்ற சொல் பழகிப்போயுள்ளது. இதனை சொல்வதிலும் ஒரு திருப்தி இருக்கத்தான் செய்கிறது.

இன்றுள்ள சமுதாய சூழ்நிலையில் எல்லோரையும் முதலில் பிடித்துக் கொள்வது இந்த மனஇறுக்கம் தான். ஒருவர் மற்றவரைப் பார்த்து என்ன ஒரே 'டென்ஷனாக' இருக்கிறியோ என்ன காரணம்? என்றால் போதும் அவரும் டென்ஷனாகி விடுவார். என்னப்பா செய்கிறது காலையிலேயிருந்து பல பிரச்சினைகள் வந்து கொண்டிருக்குது. 'நாளைக்கு மோட்கேஜ் கட்டவேணும், இரண்டு மூன்று பில் கட்டவேணும், மனைவிக்கு பிரஷர் ஏறிக்கொண்டேபோகுது, டொக்ரிடம் போகவேணும், இதற்கிடையில் கார் வேறை பிரச்சினை கொடுக்குது, என்ன செய்யிறதெண்டே தெரியவில்லை, ஒரே டென்ஷனாக கிடக்குது' என்பார். பலருடைய குடும்பங்களில் இப்படியான குழப்பநிலை என்றும் தொடர்கதைதான்.

இளையோர் சமூகத்திலும் இந்தப் பிரச்சினை இல்லாமல் இல்லை. படிப்பு பிரச்சினை, காதல் பிரச்சினை, குழுக்களில் இணையும் பிரச்சினை, பணத்தட்டுப்பாடு என்பன எல்லாமே சேர்ந்து கொள்வதால் அவர்களுக்கும் பிரச்சினை தான். கோயில் நடத்துபவர்கள் முதல் பலசரக்கு கடை நடத்துபவர் வரை எல்லோருக்குமே இந்த மனஇறுக்கம் வந்து விடுகிறது. இது சமூகத்தை பிடித்து ஆட்டுகின்ற உளவியல் பிரச்சினை தான்.

மனஇறுக்கத்திற்கு விளக்கமானது 'மனதில் எழும் வலி அல்லது மனகுழப்பம் (Mental strain or excitement) என சுருக்கமாக கூறிவிடலாம், எனினும் மனத்தில் தோன்றும் அமுக்கம் (Pressure) பதற்றம் (Anxiety) மன அழுத்தம் (Stress) மன இறுக்கம் (Tightness) என்பனவும் எழலாம். இது வந்தால் சரியாக அல்லது நிதானமாக சிந்திக் முடியாது. பௌதீகவியல் (Physics) பாடத்தில் எதிரெதிர் அழுத்தம் (The opposite of compression) என்ற கருத்தில் வரும். புவியோட்டில் (Geology) பாடத்தில் எதிரெதிர் பாறைகளின் அழுத்தங்கள் என்ற கருத்தில்வரும் மின்சாரத்தில் மின் அழுத்தம் பற்றிய கோட்பாட்டில் வரும் இப்படி சங்கீதம் போன்ற துறைகளில் கூட இச்சொல் பாவனையில் உள்ளது. இதுவே உளவியல் துறையிலும் மனரீதியில் இச்சொல் பயன்படுகிறது.



மனித மனங்களில் ஏற்படும் உளரீதியாகவுள்ள மன இறுக்கம் சமூக ரீதியானதுமொன்று. மனம், மனஎழுச்சி அல்லது நரம்பியல் சார் போன்ற சூழ்நிலைகள் கூடுதலாக தொழில் செய்பவர்களிடையே காணப்படும். காரியாலங்களில் ஒரு முகாமையாளரின் கீழ் செய்பவர்களிடையே இது அதிகமாக எழுகிறது. இதேபோல் யுத்தம் நடைபெறும் சூழ்நிலைகளில் கூட மக்களிடையே இவ்வகை பதட்டம் நிலவும். எனவே இந்த மனஇறுக்கத்திலிருந்து விடைபெற வேண்டின் அமைதி, சமாதானம், உடல்தளர்வு ஏற்பட வேண்டும்.

வரலாற்றில் 1,533 இல் 'இழுபடும் நிலமை' (stretched condition) என்ற சொல்லில் கருதப்பட்டது. 1,763ல் நரம்புவலி (nervous strain) என்ற கருத்தில் பாவிக்கப்பட்டது. இப்படியே விஞ்ஞானத்தில் 1802இல் கூடுதலாக பதிவு பெற்றது. உளவியல் ரீதியில் இதுபற்றி பல ஆய்வுகள் ஏற்பட்டன. நாம் ஒவ்வொரு எதிர்பார்ப்புக்கும் நேர்மாறாக எதுவும் நடந்து விட்டால் இந்த மன இறுக்கத்திற்கு உள்ளாகிறோம்.

மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் பல பாதிப்புக்களை இது கொண்டுவரும் கோபம், வெறி, எதிர்மறையான எண்ணங்கள், முடிவெடுக்கமுடியாமை தனிமைப்படல் போன்ற உணர்வுகள் தாக்க செய்யும்.

முதலில் ஒருவருக்கு மனஇறுக்கம் ஏற்பட்டால் மூளையில் உள்ள 'Cortisol' என்னும் மனஅழுத்த ஹோர்மோன்கள் (stress hormone) வெளியாகிறது. இது நரம்பு மண்டலத்தினை தாக்குவதால் ஞாபக மறதியும், பயமும் ஏற்படுகிறது. இதனால் அவர் பல தவறுகளை செய்வதுடன், முக்கியமானவற்றை மறந்தும் விடுவார். அத்துடன் சின்ன விடயத்திற்கும் உணர்ச்சிவசப்படுவார்.

உடல்ரீதியில் பல விளைவுகள் ஏற்படலாம் ரத்தஅழுத்தம், சர்க்கரை நோய், தோல்வியாதிகள், சுவாசக்கோளாறுகள், மூச்சுதிணறல், தலைவலி என்பன ஏற்பட முடிகிறது. சமூதாயரீதியிலும் பல பாதிப்புகள் உள. மற்றவர்கள் மீது தெரிந்து விழுவது, கோபப்பட்டு திட்டுவது, தேவையில்லாமல் சண்டை போடுவது நிகழ்கிறது. இதனால் உறவுச்சிக்கல்கள் ஏற்படுவதுடன் மற்றவர்கள் மீதும், தன்மீதும் வெறுப்பை உண்டாக்கும். இதனால் சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டு தற்கொலை எண்ணங்கள் கூடத் தூண்டும் அபாயம் உள்ளது. குடும்பங்களில் பெற்றோர்கள் கூறுவதைப் பார்த்து குழந்தைகளும் அடிக்கடி 'ஒரே டென்ஷனாக இருக்கு' என்று கூறுவதனை காணலாம். யாரைத் தான் விட்டது இந்த டென்ஷன்.

சமூகத்தில் இந்த டென்ஷன் என்ற சொல் ஒரு தேவையும் இல்லாமல் காரணம் எதுவும் இல்லாமல் கூறப்படுகிறதோ என்று எண்ண தோன்றுகிறது. எவரும் அடிக்கடி பிசி (Bussy), நேரமில்லை (No time), மூட் சரியில்லை (mood upset) என்பது போல் இதனையும் ஒரு ஸ்ரைலுக்காக கூறுகிறார்கள். தாங்கள் மட்டும் இப்படி டென்ஷன் உள்ளவர் என்று கூறுவதில் என்ன பெருமையோ தெரியவில்லை. நாம் ஒன்றினை பார்க்கும் விதம் கண்ணோட்டம் (perception) மாறினாலேயே இதனை தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்று சமூகத்தில் இடம் பெறுகின்ற பொதுவான தலைவலிகளுக்கெல்லாம் இந்த Tension காரணமாகி விடுகிறது. இது காலத்திற்கு காலம் ஏற்படலாம். 30 நிமிடம் முதல் சில நாட்களுக்கு இது இடம்பெறலாம். தலையின் இருபக்கங்களிலும் வலி ஏற்படும். கழுத்து, கண் போன்ற உறுப்புக்களிலும் ஏற்படும். ஐக்கிய அமெரிக்காவிலும் சனத்தொகையில் 30-80 வீதமானோர் இந்த வலியால் பாதிப்புறுகின்றனர். ஆண்களை விட பெண்களே பலமடங்காக பதிப்புறுகின்றனர். தசையினூடாக எழும் இவ்வலிகளுக்கு பல காரணங்கள் உள. போதியளவு ஓய்வின்மை, வேலைப்பழு, சரியான நடையுடை பாவனையின்மை, பரீட்சைக்குப் படித்தல், அதிகநேரம் கணினி முன்பு இருத்தல், மனச்சோர்வு, பதற்றம், களைப்பு, பசி என்பனவாகும்.

இதனை மேலும் தூண்டுவது குடும்ப சமூகத்தொடர்பு நண்பர்கள் புதிய வேலை, பாடசாலை என்பனவாகும். அத்துடன் குடும்ப பிரச்சினை, புதுகுழந்தைவரவு, நல்ல நண்பர்கள் இன்மை, பரீட்சைகள் நெருங்குதல், புதுவேலையில் சேருதல், வேலையை இழத்தல், எடைகூடுதல், வேலையில் தவணை வழங்கல், விளையாட்டுக்களில் ஈடுபடுதல், நித்திரை குறைவு, பலவேலைப்பழுக்களில் ஈடுபடுதல் என்பனவும் மனஇறுக்கத்தை மேலும் தூண்ட வல்லவையாகும். முதலில் மதுவை குறைத்தல், ஓய்வு எடுத்தல் (Relaxation) ,நெற்றியில் வருடுதல், நல்ல சுவாசம் (Breathing), தளர்வு (Relax), மசாஜ் (Massage), சுடுநீரில் குளித்தல் (Heat



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

**SPACE AVAIL. FOR DENTAL OFFICE**

1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - ***Middlefield & Finch.***

Dedicated underground parking & locker included.

***Pl. call: 416.315.9397***



**BRIDAL MAKE UP**

For all your bridal makeup, other occasions make up, Upto. Saree pleating, Ironing, Much more with negotiable price.

***(With Certified Licence)***

***Contact: 416.885.0992***

# AMMAN JOYTHIDA NILAYAM
# அம்மன் ஜோதிட நிலயம்

FAMOUS INDIAN ASTROLOGER

## Pandit Radha Krishnan

**647-308-5045 / 647-761-5544**

585 Middlefield Rd, Unit# 7, Scarborough, ON M1V 4Y5
Finch & Middlefield Beside Datta Foods







ஜோதிடம் இறைவனால் பரம்பரை பரம்பரையாக எமது குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அருங்கொடையாகும்.
இவர் கைரேகை, சாதகம், மற்றும் வழிகளில் துல்லியமாக உங்கள் வாழ்க்கையில் நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். பேய் பிசாசுகள் விரட்டி உங்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

### துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்:

- கைரேகை
- நாமநட்சத்திரம்
- கல்வி
- உத்தியோகம்
- தொழில்
- வியாபாரம் விருத்தியடைதல்
- இலட்சுமி வசீகரம்
- திருமணயோகம்
- குழந்தைப்பாக்கியம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- வாஸ்துசாத்திரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டு பயணங்கள்
- எதிரிகள்
- கண்திருஸ்டி
- கஸ்டநஸ்டங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- வாகனப் பொருத்தம்
- பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சினைகள்

ஒன்றுகூடல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். ஏதேனும் கெட்டது இருந்தால் பரிகாரம் செய்வார். உங்கள் கதவைத்தட்டும் அதிஸ்டத்தை தவறவிட்டு விடாதீர்கள். இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்பனை பற்றி நன்கு அறிந்து வாழ்க்கையை நல்லதாக்கிகொள்ள பண்டித் அவர்களை சந்தியுங்கள்.

# பூனையின் வியாபாரம்

ஒரு ஊரில் பூனை ஒன்று வாழ்ந்து வந்தது. அது எப்படியாவது கொஞ்ச காசு சம்பாதிக்கலாம் என்று நினைத்தது. அது உண்மையான வேலை செய்யப் பஞ்சிப்பட்டது. திருடவும் பூனைக்கு ஆசை இல்லை. எனவே மற்றவர்களை ஏமாத்தி வாழலாம் என நினைத்தது.

பூனை ஒரு யோசனை செய்தது. அது கொஞ்ச புல்லையும் ஒரு சில இலைகளையும் தண்ணீரில் போட்டது. அதை கொஞ்ச போத்தல்களிலும் ஊத்தி வைத்தது.

பின்னர் அது வீடு வீடாய் போய் கதவை தட்டி பக்கத்து வீட்டு மிருகங்களுக்கு கெல்லாம் அதை விற்கத் தொடங்கியது.

'இதைக் குடித்தால் உங்களுக்கு தைரியம் வரும்!' என்று பூனை கூறியவுடன் முயல் அதை வாங்கி விட்டது.

'நீங்கள் இதைக் குடித்தால் உங்கள் எதிரிகளை பிரச்சினைகள் இல்லாமல் தாக்கலாம்' என்று பூனை கூறியவுடன் குதிரையும் அதை வாங்கிவிட்டது.

கொஞ்ச நாட்களுக்குப் பின் பூனை ஓரளவுக்கு பணம் சம்பாதித்தது. அது கொஞ்ச நல்ல புல்லையும், நல்ல வாசமான இலைகளையும் தண்ணீரையும் சேர்த்து கூட தரமுள்ள போத்தல்களில் விட்டு விற்றது.

இதனால் பூனையின் 'அதிசய தண்ணீர்' கூட விற்பனையாயிற்று. பூனைக்கு பொருள் விற்பனை செய்யும் திறமையும் வளர்ந்து கொண்டிருந்தது. அது ஒருநாள் ஒரு வீட்டிற்கு அதிசய தண்ணீரை விற்க வந்தது. அங்கு ஒரு பறவை வசித்தது. பூனையும் வழமை போலவே கதவை தட்டி விற்பனை செய்யத் தொடங்கியது.

'இந்த அதிசய தண்ணீரை நீங்கள் குடித்தால் நீங்கள் மிக தைரியசாலி ஆவீர்கள்' என்றது பூனை.

'அப்படியா? நீங்கள் குடித்து தைரியசாலி ஆகிவீட்டீர்களா?' என்று பறவை பூனையை திருப்பிக்கேட்டவுடன் பூனை அதிசயப்பட்டது.



'நான் தைரியசாலி தான்!' என்றது பூனை. 'அதனால் தான் இந்த தண்ணீரை நான் செய்து விற்கிறேன்' என்றது பூனை.

'அப்படி என்றால் ஏன் இன்னமும் நாயைக் கண்டு பயப்படுகிறீங்கள்?' என்றது பறவை.

உண்மையை மறைத்து தனக்கு நாயிற்கு பயமில்லை என பூனை பொய் சொல்ல நினைத்தது. அப்பொழுது தான் பறவையின் பக்கத்து வீட்டு நாய் தன் கதவைத் திறந்தது. அது பூனையைக்கண்டது. பூனையோ நாயைக் கண்ட உடனே பயந்து போய் தான் கொண்டு வந்த போத்தல்கள் எல்லாவற்றையும் விழுத்தி விட்டு ஓடியது.

பறவையும் நாயிற்கு நன்றி கூறி விட்டு உள்ளே சென்றது. பூனையால் ஏமாந்து போன மற்ற மிருகங்கள் எல்லாம் இந்த விடயத்தைக் கேட்டு பூனைமேல் கோபம் கொண்டன.

**நீதி: எல்லோரையும் எல்லா நாட்களும் ஏமாற்றமுடியாது.**



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# Education

## Answer Key : 14-13

### BIOLOGY 12

**(I)** sucrose, lactose and maltose disaccharides, each consist of two monosaccharide units linked together by an glycosidic linkage.

(i) sucrose : D- glucose and D- fructose joined by α-1,2-glycosidic bond

(ii) lactose: D- glucose and D- galactose joined by β-1,4- glycosidic bond

(iii) maltose - two molecules of D- glucose joined by α-1,2-glycosidic bond

**(II)** Polysaccharides are polymer of monosaccharide units linked together by glycosidic bonds.

Starch is mde up of amylase and amylopectin. Amylose is polymer of D-glucopyranose formed by α – 1,4 – glycosidic bonds.

Amylopectin is a polymer of D-glucopyranose formed by by α – 1,4 – glycosidic bonds and α – 1,6 – glycosidic bonds.

Amylose is a linear structure polymer, but amylopectin is a branched polymer due to α – 1,6 – glycosidic bonds.

Glycogen – similar to amylopectin . However more branches compared to that of amylopectin.

Cellulose – a linear polymer of D-glucopyranose formed by β – 1,4 – glycosidic bonds.

**(III)** Steroids are a class of lipids, that have a characteristic structure consists of three six carbon and one five carbon ring.

Major classes of steroids are cholesterol, steroid hormones and bile salts.

Cholesterol is the parent steroid from which steroid hormones such as sex hormones, adrenocorticoid hormone, vitamin D and bile salts are synthesized.

Cholesterol – most widely occurring steroid found in all animal tissues. Essential to human life. It is known to serve an intermediate in the biosynthesis of all of the steroids of the body. Since the body can synthesise cholesterol, we do not have to have cholesterol in diet. High level of cholesterol causes development of arterioscelersis and plaque formation – causes heart attack.

### Adv. FUNCTIONS 12

(i) leading coefficient = 1

(ii) $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x)$ =20 and x = 4, and then find the value "a " and write the equation

## Review Questions14 -14

### CHEMISTRY 12

(i) Predict the bond angles about each atom of the following compounds.

A) $H_3C—CHO$ B) $CH_3NHC_2H_5$ C) $PCl_5$

(ii) Identify the most polar bond in each molecule

(a)$HSCH_2CH_2OH$ (b) $CHCl_2F$

### BIOLOGY 12

Briefly describe the three dimensional shapes of polypeptides and protein.

Ans. key 14-14 - next issue

☎ 647 341 3975
Dr. K.A.Srikrishnaraj
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# மன இறுக்கம்

31ஆம் பக்கத்தொடர்ச்சி

water bathing) வலி நீக்கும் மருந்துகளை பாவித்தல் நல்லது.

'Maturity is achieved when a person accepts life as full of tension' - Joshua L. Liebman (வாழ்க்கையில் பல்வேறு மன இறுக்கங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளும் போது ஒருவர் முதிர்ச்சியடைகின்றார். மன இறுக்கத்தினை இல்லாமல் செய்வதற்கு பல்வேறு உடலியல், உளவியல் முறைகளை பயன்படுத்தலாம். முதலில் தனக்கு அடிக்கடி இப்பிரச்சினை ஏற்படுகிறது என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். முதலில் மனதை லேசாக வைத்துக் கொள்ளல் மிக முக்கியமானதாகும். சிலர் எப்போது பார்த்தாலும் ஏதோ ஒன்றை இழந்து விட்டது போல மிகவும் சீரியசாக இருப்பர். சிலரை பார்க்கவே பயமாக இருக்கும். மயிரை பிய்த்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடுவர். துணைவர்களை பேசிக்கொண்டு பிள்ளைக-ளையும் தாக்க முயல்வர். இப்படி யானவர்களுக்கு தேவையானது மன ஓய்வுதான்.

பல மனஇறுக்கமுள்ளவர்கள் மதுபோதை யில் வருவர். தங்களது பலவீனத்தை குறைக்க மதுவை அருந்திவிட்டு மனஇறுக்கத்தினை கூட்டிக் கொள்வர். எமது சமூத்தில் உள்ள சில பண்பாட்டு நிகழ்வுகள் பலரை இந்த டென்ஷனுக்கு உட்படுத்துகிறது. அரங்கேற்றம், பூப்புனித நீராட்டு விழா, திருமண விழா, மற்றும் கலை நிகழ்வுகள், திருவிழாக்கள் போன்றனவெல்லாம் மனதினை குழப்பும் விடயங்கள். பல சங்கங்களில் பதவிகளை ஓடி ஓடி பெற்றுக்கொண்டு வீட்டில் அவதிப்படுபவர்கள் பலர். இவர்களால் எந்த வேலையையும் சரியாக கவனிக்க முடியாது. எனவே வேலைப்பழுக்களை குறைத்தல் அவசியம். இளையோர்கள் படிக்காமல் இருந்து விட்டு பரீட்சை நெருங்கும் தருணம் இவ்வாறான மன இறுக்கத்திற்கு உள்ளாகுபவர்கள் திட்டமிட்டு படிக்க வேண்டும். எமது சமூகத்தில் தேவைக்கதிகமான கோவில்கள், கடைகள், உணவகங்கள், பெருகி வருகின்றன. இவர்களில் பலர் முழுநாளும் வேலையில் இருப்பதால் ஓய்வு கிடைப்பதில்லை. வாரத்தில் ஒரு நாளாவது மனைவி, பிள்ளைகளுடன் வாழ்ந்து மகிழ வேண்டும். பலர் ரைலனோல் (Tylonol), அட்வில் (Advil) பாவித்தே வாழ்கின்றனர். சங்கீதம் கேட்டல் மிகப்பெரிய மனஇறுக்க ஆறுதல் (Music is like huge release of tension) என்று கூட கருதலாம். பொதுவாக எந்த ஒரு மனஇறுக்கமுள்ளவரும் ஓய்வாக இசையை ரசித்தால் மனம் குதூகலிக்கும், வலியும் போய்விடும். தற்போது இசை மருத்துவம் (Music therapy) பிரபல்யம் பெற்று வருகிறது. படுக்கைக்கு போகும்போது இசையை கேட்கலாம்.

எமது மன இறுக்கத்தினை குறைப்பதற்கு உடற்பயிற்சி மிகவும் வேண்டப்படுவ தொன்று. நன்றாக சுவாசித்து, உடலுக்கு ஓய்வு கொடுத்து தேவையற்ற சிந்தனை-களை வெளியேற்றிவிட்டால் மனம் இலேசாகிப் போகிறது. இதற்கு பல்வேறு உடற்பயிற்சிகள் உதவுகின்றன. அத்துடன்



தியானம் (meditation) நல்லதொரு வழி யாகும். இந்தியாவின் பழைய வரலாறுகளில் முக்கியம் பெற்ற தியான முறைகள் மேற்குலகத்திற்கு இப்போது வேண்டப்படு கின்றது. காரணம் மனஇறுக்கத்திலிருந்து விடுபட இது உதவுவதேயாகும். அத்துடன் யோகா (Yoga) இன்று உலகெங்கும் பயன்படுகிறது. ஒரு சர்வரோக நிவாரணியாக இது உதவுவதால் எல்லோரது மனஇறுக்கத்தையும் போக்க

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
SPECIAL CLASSES FOR
PRE-UNIVERSITY
MCAT EXAM
IB & AP program
SUMMER CLASSES "July- August"
REGULAR CLASSES "Throughout the year"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# ஒன்று தமிழ் - இன்னொன்று வாழ்க்கை!

## நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்
***Vlambaram@sympatio.ca***
**யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!**

பாடப் புத்தகங்களில் அறிவை வளர்க்க முற்பட்ட நாம், மனிதநேய உணர்வை வளர்க்க ஏன் மறந்தோம்? அயல் மண்ணின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொன்ன நாம், சொந்த மண்ணின் துயரங்களையும், பெருமைகளையும் ஏன் சொல்ல மறந்தோம்? பணம், பதவி, வெற்றி என்பவைகளை நோக்கியே நம் குழந்தைகளைத் துரத்தும் நாம் குற்றவாளிகள் இல்லையா? ஏறு, ஏறு, மேலே ஏறு என்று பிள்ளைகளை விரட்டிக் கொண்டே இருந்த நாம், அவர்கள் மேலேறிய பிறகு பெற்றோரை, உறவினர்களை மறந்து விட்டார்களே என்று ஆதங்கப்படுவதில் என்ன நியாயம் உள்ளது? குழந்தைகளுக்காக ஏராளமாக எழுதிக் குவித்துவிட்டு, தன் 90ஆவது வயதில், அண்மையில் இறந்து போன, புகழ்பெற்ற எழுத்தாளர் வாண்டுமாமா, 'இந்தக் காலக் குழந்தைகள் பாவம் என்று சொல்லத் தோன்றுகிறது. இவர்களுக்கென்று எழுத யாருமே இல்லையே. நவீன சாதனங்களின் வளர்ச்சி வரவேற்கக் கூடியதுதான்.

எனினும், அவைதான் வாழ்க்கை என்றால், அது என்ன வாழ்க்கை? 'உங்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்லுங்கள். படிக்கச் சொல்லுங்கள். கதைப் புத்தகங்கள் வாங்கிக் கொடுங்கள்' என்று தன் கடைசிச் செய்தியைச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார். அன்பை மேம்படுத்தவும், உறவுப் பாலங்களை வலுப்படுத்தவும் எந்தப் பள்ளிக் கூடத்தில் இன்று கதைகளும், பாட்டுகளும் சொல்லப்படுகின்றன? கேட்டால், அன்பு சோறு போடுமா, அன்பு வேலை வாங்கித் தருமா என்பன போன்ற கொச்சையான வினாக்கள் நம்மிடம் உள்ளன. முன்பெல்லாம், பள்ளிகளில் 10, 12ஆம் வகுப்புகள் வரையில் நன்னெறி வகுப்பு (Moral Class) என ஒன்று இருந்தது. வகுப்புக்கும், மருந்துக்கும் கூட நீதி தேவையில்லை என்று விட்டுவிட்டோமே? அந்த வகுப்புகளில் சின்னஞ்சிறு கதைகளும், நெஞ்சைத் தொடும் பாடல்களும் சொல்லிக் கொடுக்கப்படும். அவற்றைக் கேட்டு, அத்தனை பேரும் மகாத்மாக்கள் ஆகி விட்டனர் என்று சொல்ல வரவில்லை. அவற்றைக் கேட்ட நூறு பேரில் ஒருவருக்கேனும் அந்தக் கருத்துகள் மூளையில் படிந்திருக்காதா? அந்த நூற்றில் ஒருவனால் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாதா? இப்போதும் கூட எல்லாம் கைவிட்டுப் போய்விடவில்லை. இந்தத் தலைமுறைக் குழந்தைகளையாவது 'அறம்' நோக்கித் திருப்புவோம்.

வீடுகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் தமிழ்ப் பாடல்களும், கதைகளும் ஒலிக்கட்டும். Ringa ringa Roses' ' Rain rain go away' போன்ற நம் மண்ணுக்கும், மரபுக்கும் பொருந்தாத பிறமொழிப் பாடல்களையெல்லாம் உடனடியாக நாட்டை விட்டு விரட்டிவிட வேண்டும் என்பது நடைமுறையில் நடக்கக் கூடியதன்று. அவற்றோடு சேர்ந்தாவது ஆத்திச் சூடியும், கொன்றை வேந்தனும் ஒலிக்கக் கூடாதா என்று ஏங்கும் அவல நிலையில்தான் நாம் உள்ளோம். திருக்குறள், சங்க இலக்கியம் போன்ற நூல்களை எல்லாம் அறிமுகப் படுத்துவதற்கு முன்பு, தமிழ்நாட்டில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஏழு நீதி நூல்களை மீண்டும் கண்டெடுத்துக் கொண்டு வர வேண்டிய கட்டாயத்திற்கு நாம் வந்து விட்டோம். அந்த ஏழு நூல்களில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நான்கு நூல்களை ஔவை யார் எழுதியுள்ளார். உலகநாதர் எழுதியுள்ள 'உலகநீதி', அதிவீரராம பாண்டியரின் 'வெற்றி வேற்கை', சிவப்பிரகாச அடிகளாரின் 'நன்னெறி' ஆகிய மூன்று நூல்களையும் சேர்த்து மொத்தம் ஏழு நூல்கள். இளந்தமிழ் நூல்கள் 'ஏழு' என்பார் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார். இவ்வேழு நூல்களும், நம் பிள்ளைகளுக்கு இரண்டினைக் கற்றுக் கொடுக்கின்றன. ஒன்று, தமிழ். இன்னொன்று, வாழ்க்கை! தமிழறியாத் தமிழர்கள் தென் ஆப்பிரிக்காவிலும், மொரிஷியஸ் போன்ற தீவுகளிலும் உண்டென்று கவலைப்பட்ட காலம் போய், இன்று அத்தகைய தமிழர்களை நாம் தமிழ்நாட்டிலேயே பார்க்க முடிகிறது. தமிழை ஏன் தெரிந்து கொள்ள வேண்டும், தமிழிலேயே ஏன் பேச வேண்டும், தமிழில் ஏன் பெயர் சூட்ட வேண்டும் என்றெல்லாம் நம் பிள்ளைகள் நம்மிடம் கேட்கின்றனர். தமிழ் என்பது நம் அடையாளம்.


நமக்கு ஆயிரம் அடையாளங்கள் இருந்தாலும், மொழியே நம் முதல் அடையாளம். 50 ஆண்டுகள் அந்நிய மண்ணில் வாழ்ந்தாலும், அந்த நாடும், மக்களும் நம்மை அந்நியனாகத்தான் பார்ப்பார்கள். ஆங்கிலேயர்களுக்கு இணையாய் ஆங்கிலம் பேசினாலும், சீனர்களுக்கு இணையாய்ச் சீனம் பேசினாலும், நாம் ஆங்கிலேயர்களாகவோ, சீனர்களாகவோ ஆகிவிட முடியாது. அவர்களும் நம்மை அப்படி ஏற்றுக் கொண்டுவிட மாட்டார்கள். தமிழர் என்பதே நம் அடையாளம்! இன்று நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தமிழில் கையொப்பம் இடுவதில்லை, பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுவதில்லை. நவீனத்தை நோக்கி நகர வேண்டாமா, பழைமையிலேயே ஊறிக் கிடப்பதா என்று இளைஞர்கள் கேட்கின்றனர். சமற்கிருதப் பெயர்கள் ஒன்றும் புதுமையானவை அல்ல. அந்த மொழியும், தமிழைப் போலப் பழைமையானதுதான். அந்த மொழி யாருக்குத் தாய்மொழியோ, அவர்கள் அம்மொழியில் பெயர்சூட்டிக் கொள்ளட்டும். தமிழர்களே தமிழில் கையொப்பம் இடவில்லை என்றால், வேறு யார் தமிழில் கையொப்பம் இடுவார்கள்? தமிழர்களே தங்கள் குழந்தைகளுக்குத்



**- ஜெகன் -**

தமிழில் பெயர் சூட்டவில்லையென்றால், ஜப்பானியர்களா தமிழ்ப் பெயர் சூட்டுவார்கள்? நம் மொழியை நாம் மறப்பது, நம் முகத்தை நாமே சிதைத்துக் கொள்வது போலத்தான்! இதற்கெல்லாம், "மொழி வெறி" என்றும், "குறுகிய மனப்பான்மை" என்றும், "பழைமை வாதம்" என்றும் இலவசப் பட்டம் வழங்கும் இளைஞர்களின் ஒரு பகுதியினரை நோக்கி நாம் உரத்துச் சொல்ல வேண்டிய சில செய்திகள் உள்ளன. தன் தாயை நேசிப்பது "தாய்வெறி" அன்று. தன் தாயிடம் அன்பு காட்டுவதால், பிற தாய்களையெல்லாம் வெறுக்கிறோம் என்றும் பொருள் இல்லை. இது தாய்க்கும் பொருந்தும், தாய்மொழிக்கும் பொருந்தும். நாம் எந்த மொழியையும் வெறுக்கவில்லை. மொழியில் உயர்வு, தாழ்வை நாம் கற்பிக்கவில்லை. அவரவர் தாய்மொழி, அவரவர்க்கு உயர்வான ஒன்றே! ஆதலால், தாய் மொழி பேணுதல் அனைவர்க்கும் அழகு. பிறமொழிகளைக் கற்றுக் கொள்வதில் எந்தப் பிழையும் இல்லை. பிறமொழி கற்றல் இன்றைய தேவையும் கூட. நம் தேவைக்கும், திறமைக்கும் ஏற்ப, எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், தாய்மொழிக்கு மாற்றாக இல்லை என்பதில் மட்டும் உறுதி வேண்டும். தாய்மொழி அடித்தளம். பிறமொழிகள் அனைத்தும் மேற்கட்டுமானங்கள். அடித்தளம் சரியில்லாத கட்டிடம் ஆடிப்போகும். தாய்மொழி கண். பிறமொழிகள் அனைத்தும் கண்ணாடிகள். கண் உள்ளவர்க்கு மட்டுமே கண்ணாடிகள் பயன்படும். பிற மொழிகளின் மீது நமக்கு வெறுப்போ, பகையோ இல்லை. எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளுங்கள். தாய்மொழியின் மீது பற்றுக் கொள்ளுங்கள் என்பதே நம் வேண்டுகோள். சமஸ்கிருதத்தையும், இந்தியையும் பகைக்கவில்லையா, இந்தி எதிர்ப்புப் போராட்டமே நடத்தவில்லையா என்று நீங்கள் கேட்கக் கூடும். உண்மைதான், அவை எந்த ஒரு மொழியையும் எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டங்கள் இல்லை. நம் மொழியின் மீது அம்மொழிகள் ஆதிக்கம் செலுத்த முயன்றபோது, அதனை எதிர்கொண்ட எழுச்சிப் போராட்டங்கள் அவை. இன்றைய தினம் நாம் ஆங்கில அடிமைகளாகவும் ஆகிக் கொண்டிருக்கிறோம். இந்நிலையும் எதிர்க்கப்பட வேண்டியதே! சில வாரங்களுக்கு முன் இத்தொடரில், தூரதர்ஷன்" என்னும் சமற்கிருதப் பெயருடன் 1976இல் தமிழ் நாட்டிற்குத் தொலைக்காட்சி வந்தது என நான் எழுதியிருந்தேன். சமஷ்கிருதப் பெயரை மட்டும் குறிக்கின்றீர்களே, "சன் டி.வி" என்னும் ஆங்கிலப் பெயர் உங்களை உறுத்தவில்லையா என்று ஒரு நண்பர் கேட்டுள்ளார். நியாயமான கேள்விதான். நான் அந்தப் பெயரையும் சேர்த்துத்தான் குறித்திருக்க வேண்டும். அது என் பிழையே. தாய்மொழியைத் தவிர்த்துவிட்டுச் சூட்டப்படும் பிறமொழிப் பெயர்கள் அனைத்தும் நம் எதிர்ப்புக்கும், கண்டனத்திற்கும் உரியவையே. என்றாலும் சமஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளையும் ஒரே தட்டில் வைத்து என்னால் பார்க்க இயலவில்லை. இரண்டிற்குமிடையே மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன. இம் மொழிச்சிக்கல் குறித்தும், நம் நாட்டின் மொழி சார்ந்த அரசியல் குறித்தும் விரிவாகவே இத்தொடரின் பின் பகுதியில் நான் எழுதவிருக்கிறேன். இப்போது, ஆத்திசூடி முதலான ஏழு நீதி நூல்கள், தமிழையும், வாழ்க்கையையும் ஒருசேர நம் பிள்ளைகளுக்கு எப்படிக் கற்றுத் தருகின்றன என்று பார்க்கலாம். அறம் செய விரும்பு, ஆறுவது சினம் என்று தொடங்கும் ஆத்திசூடி, அகர வரிசையில் அமைந்திருப்பதை நாம் அறிவோம். பாட்டு நயத்தோடு சேர்த்து, இளம் பிஞ்சுகளுக்கு, அ, ஆ, இ... என்னும் அகரவரிசையையும் சொல்லித்தரும் பாங்கு இது. ஆத்திசூடியில் உள்ள அனைத்து அறிவுரைகளும் இரண்டிரண்டு சொற்களால் ஆனவை. குழந்தைகள் முதலில் ஒலிகளைக் கற்றுக் கொள்கின்றன. பிறகு ஒற்றைச் சொற்களை (Mono sylable)ப் பேசக் கற்கின்றன. ஆத்திசூடி அவர்களுக்கு இரட்டைச் சொற்களை (Bi sylables)க் கற்றுக் கொடுக்கிறது. ஆத்திசூடி, திருக்குறளை விடச் சுருக்கமானது. இரண்டே சொற்களில் வாழ்க்கை நெறிகளைச் சுருக்கி வைத்துள்ளது. அடுத்து, கொன்றை வேந்தனுக்குப் போனால், அங்கு நான்கு நான்கு சொற்களில் செய்திகள் கூறப்பட்டுள்ளன. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று...... இப்படி அங்கும் அகர வரிசையில் கருத்துகள் அமைக்கப் பட்டுள்ளன. வெற்றி வேற்கை, அகர வரிசையில் அமைக்கப்படாத, நான்கு சொற்களைக் கொண்டுள்ள ஒரு வரிச் செய்திகள். மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகியன வெண்பாக்களிலும், உலகநீதி எண்சீர் விருத்தத்திலும் அமைந்துள்ளன. படிப்படியாகத் தமிழின் எழுத்து, சொல், யாப்பு, அணிகளைச் சொல்லிக் கொடுக்கின்றன இவ்வேழு நூல்களும்!

- நன்றி: சுப வீரபாண்டியன்

# சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மன இறுக்கம்

341ஆம் பக்கத்தொடர்ச்சி



இது உதவக்கூடும். பொதுவாக எமது மனஇறுக்கம் முகத்திலேயே வந்து முடிகிறது. இதை மாற்ற தேவையானது பூரண மகிழ்ச்சியாகும். எந்தவழியிலும் இதனை பெற முயற்சிக்கலாம்.

நன்றாக சிரிக்க தெரிய வேண்டும். சிரிப்புக் கூட மனஇறுக்கத்தினை அகற்றும் மர்ம மருந்தாகும். இந்த சிரிப்புக்கூடாக பெருமளவு நேரம் எமது மனஇறுக்கத்தினை போக்க முடியும். உலகமே டென்ஷன் நிறைந்தது தான் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் எது எமக்கு டென்ஷனை தருகிறதென்பதனை அறிந்து அதனை நீக்க முயல்வதே சுலபமான வழியாகும்.

அகந்தை (Ego) கொள்ளாத அமைதியான பேச்சு (Loose talk), நயத்திறம் (Diplonacy) ஒத்துப்போதல் (Compromise) சகிப்புத் தன்மை (Tolerance), நெகிழ்வுத்தன்மை, (Flexibility), பணிவு (Courtesy) என்பவற்றுடன் புன்முறுவலும், அன்புச் சொற்களும் கொண்டு நாமே துணிந்து எதனையும் ஆரம்பித்து விட்டால் இந்த மனஇறுக்கம் முற்றாக மறைந்து போய்விடும்.

# நெய்தல்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

பணிவுடன் பேசி என் மனதை மகிழ்வித்தவன். பின்பு மலையில் முதிர்ந்து எவர்க்கும் பயனளிக்காததும் வீழ்ந்து வழிவதுமான தேனடையைப் போல போனவன். அத்தலைவன் இப்போது எங்கு இருக்கின்றானோ? காட்டில் பெய்த இடியோசையுடன் கூடிய மழை கலங்கி நம்முடன் வருவதுபோல எனது மனதும் அமைதியற்று அவன் நினைவில் கலங்குகின்றது. இதுதான் அப்பாடல் -



ஒருநாள் வாரலன், இரு நாள் வாரலன்
பல் நாள் வந்து பணி மொழி பயிற்றி என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்னை
வரைமுதிர் தேனின் போகியோனே
ஆக ஆக எந்தை யாண்ணாடு ஊன் கொல்லோ?
வேறு புலன் நல்நாட்டுப் பெய்த
எறுடை மழையின் கவிழும் என் நெஞ்சே

இப்பாடல் மிக மிக நுட்பமான வார்த்தைகளில் மனதின் நெகிழ்ச்சியைப் புலப்படுத்துவதைப் பார்க்கலாம். இங்கு பயன்படுத்தப்படும் மொழியின் நெகிழ்ச்சியின் மூலமாகவே நாம் அந்த மனநிலைகளின் செறிவை ஆழ்ந்து உணரமுடிகிறது. இத்தகைய ஒரு மொழிச் செறிவு ஒரு நாகரிக மனத்தின் அடையாளமாகவும் அத்தகைய நுட்பம் கைவரப் பெற்ற ஒரு சூழல் கலாச்சார செறிவு கொண்டிருக்கும் பல்வேறு சாத்தியங்களையே உணர்த்துகிறது.

# மனதில் பட்டது நெஞ்சைத்தொட்டது

## அழகிய அங்கங்கள் - ஜொலிக்கும் தங்கங்கள்

எப்போது வரும் வரும் என எதிர்பார்த்திருந்த 'சம்மர்' என்னும் கோடைகாலம் வந்துவிட்டது. மாரிகாலம் முழுவதும் வலுவிழந்திருந்த சூரியன் தன் வித்தையைக்காட்ட வெளியே வந்துவிட்டான். தமது இலைகளையும் தளைகளையும் இழந்து பரிதாபமாகக் காட்சியளித்த கனடிய மரங்கள் நித்திரையைத்துறந்து நாளொருகோலத்தில் பச்சைப்பசேலெனத் தளைத்து ஆரவாரித்து அவை அடையும் மகிழ்ச்சி அளவிட முடியாதது. மரங்கள் மட்டுமா மகிழ்ச்சியடைகின்றன? மனிதர்கள் கூடத்தான்.

குளிரைத்தாங்குவதற்காக ஒன்றன்மேல் ஒன்றாக பல உடைகளைச் சுமந்து திரிந்தவர்கள் அவைகளுக்கு விடைகொடுத்து விட்டு அப்பாடா இதுவல்லவோ சுகம் என உடம்பிலுள்ள ஆடைகளை எவ்வளவுதூரம் குறைக்கமுடியுமோ அவ்வளவு தூரம் குறைத்துவிட்டு செழிப்பான அங்கங்களை வெளிக்காட்டிக்கொண்டு திரிகிறார்கள். அவர்களுக்கு இது சகசமானதுதான். உடை விடையத்தில் சற்று இறுக்கமான கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்த எமக்கு இதைப்பார்க்க முடியவில்லை. அது எங்கள் புத்தியில் ஊறிப்போன பழக்கதோசமாக இருக்கலாம்.

கோடை பிறந்துவிட்டது. எமது தாய்க்குலமும் எதையாவது காட்டவேண்டுமே. அவர்களைப் போல் இவர்களும்.. சீச்சீ... அது முடியாத காரியம். அங்கங்கள் அவர்களது சொத்து என்றால் எம்மிடமுள்ள தங்கங்கள்தான் எமது சொத்து. சிறுகச்சிறுகச் சேமித்து கிலோக்கணக்கில் வாங்கி வைத்திருக்கும் தங்க நகைகளே எமது சொத்து. பாதுகாப்புக்காக வங்கி லொக்கரில் அதைப் பூட்டி வைத்திருந்தாலும் கோவில் குளம் தினம் திரி என்று வரும்போது அவைகள் எம் மாதரின் அங்கங்களில் குடியேறிவிடும். மாரிகாலத்தில் கம்பளி உடைகளுக்குள்ளே அவைகள் ஒளிந்துகொள்வதால் அவற்றின் பெருமை அடக்கித்தான் வாசிக்கப்படுகின்றது. கண்கொத்திப்பாம்பாக பார்த்துத்திரியும் கள்வர் கண்களிலும் இலகுவில் தென்படுவதில்லை. அதனால் மாரிகாலத்தில் நகைக் களவு அரிதாகவே நிகழ்கின்றது. கோடை காலத்தில் வழக்கம்போலவே குளிர் உடைகள் விடைபெற்றுவிடுவதனால் அவர்களின் அங்கங்களை ஆட்சிசெய்யும் தங்கங்கள் கொடிகட்டிப்பறக்கின்றன. அயலவர்க்கு பெருமைகாட்டும் அதேவேளை கள்வருக்கும் விளம்பரம் கிடைத்து விடுகின்றது.

தலைக்குள் மூளை இல்லாவிட்டலும் கழுத்திலும் கையிலும் பொன்னகை மின்னாவிடால் அவர்களின் அந்தஸ்தை ஒருபடி குறைவாகவே பார்க்கப் பழகிவிட்டோம்.

தங்கங்களால் அக்கங்களை நிரப்பிய ஒரு பெண்ணும் அவரது கணவரும் பஸ்ஸில் பிரயாணம் செய்தார்கள். பக்கத்து இருக்கையில் ஆடைகளுக்கு விடை கொடுத்து விட்ட கறுப்பினத் தம்பதியினர். எமது ஆணின் பார்வை கறுப்பின பெண்ணின் அங்கத்தில். கறுப்பின ஆணின் பார்வை எமது பெண்ணின் தங்கத்தில். பகல்



**இடைக்காடன் கனடா**

வேளையானபடியால் பத்திரமாக வீடுவந்து சேர்ந்துவிட்டார்கள்.

ஒரு அரசன், கொடுங்கோல் அரசன். எப்போது இவன் சாவான் என மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஒருநாள் நாட்டு மக்கள் அனைவரையும் வரவழைத்து ஒரு கூட்டம் நடத்தினான். முடிவில் தனது பெறுமதியைக்கூறும்படி மக்களிடம் கூறினான். எவருமே வாய் திறக்கவில்லை. கூறாவிட்டல் அனைவரையும் கொன்றுவிடுவதாக மிரட்டினான். அப்போது துணிவுள்ள ஒரு இளைஞன் எழுந்து என்னை ஏதும் செய்யா விட்டல் இதற்கான பதிலை நான் கூறுகின்றேன் என்றான். சரி ஏதும் செய்ய மாட்டேன், கூறு என்றான் அரசன்.

என்ன, மிஞ்சி மிஞ்சிப்போனால் நூறு பொன் தேறும் என்றான் இளைஞன்.

என்ன? நான் அணிந்திருக்கும் ஆடை அணிகலன்களே நூறு பொன் தேறுமே என்றான் அரசன்.

அதற்குத்தான் அந்த விலை என்றான், இளைஞன்.

தான் சொன்னபடி கோபத்தை அடக்கிக் கொண்டான், தன்னையும் திருத்திக் கொண்டான் அரசன்

எம்மிடம் திறமைகள் இல்லாதபோது அங்கங்களும் தங்கங்களும் அந்த இடத்தைப் பிடித்துக்கொள்கின்றன.

# நெய்தல் நிலத்துக் காட்சிகளும் வாழ்வியலும் சங்கப்புலவர்கள் காட்சிப்படுத்தியவை எவை?

- த. சிவபாலு -
B.Ed (Hons), M.A

காதலால் கட்டுண்டு நன்னு உறவாடி இருந்தவேளை இடையே திடீரெனக் காதலன் வரவில்லை என்றால் காதலியின் நிலை என்னாவது? கணப்பொழுதும் பிரிய மனமின்றி இருக்கும் காதலர்கள் பிரிந்துசெல்வது மனதை உருக்கும் நிலைதான். ஆனால் மீண்டும் வருவார் என்தலைவர் என எண்ணும் பேதையவள். மிக நீண்ட நாட்களாக உறவாடி சந்தித்துப் பேசி பழகிய காதலன் வராமல் இருப்பதற்கான காரணத்தைக் கண்டறியமுடியாத தலைவி அவள்தான் தனது உள்ளத்தை அவனிடம் பறிகொடுத்தவளின் மனக்கொந்தளிப்பு எப்படியாக இருக்கும். வேதனைச் சாகரத்தில் மூழ்கியிருக்க மாட்டாளா? இதனை மிக அழகாகப் படம்பிடித்துக்காட்டுகின்றார்கள் சங்கப் புலவர்கள். அன்றைய சமுதாயத்தில் காணப்பட்ட இயல்பு நிலையை நன்கு அறிந்து வைத்திருந்தவர்களாச்சே. அப்படியே இன்றைய சினிமாக்காட்சி போன்று மிகவும் மென்மையும், நொதுமையும் வெளிப்படும் பண்பார்ந்த சொற்கோப்புக்களாக்கி செய்யுடைகளைக் கட்டி வைத்திருக்கின்றார்கள் என்றால் அவர்களின் இலக்கிய திறன், சமுதாயப்பார்வை என்பனவற்றை நாம் வியந்து பார்க்காமல் விட்டுவிட இயலாது அல்லவா?

அடிக்கடி காதலனும் காதலியும் களவுவழி சந்தித்து உரையாடி மகிழ்ந்து குலாவியுள்ளனர். ஆனால் வருவேன் என்று சொல்லிச் சொன்ன காதலன் வராதமையால் மனம் பதைத்து கவலையுற்ற காதலி ஆளாய் தனது மனதில் உள்ளவற்றை யாருக்கெடுத்துரைப்பாள் ஒன்று தோழியிடம் அல்லது செவிலித்தாயிடம் தானே? தோழியிடம் அவன் பலநாட்கள் வந்து தன்னோடு நெடுநேரம் இருந்து பழகிச் சென்றவன் வரவில்லையே. அதனை நினைக்கும் தோறும் எனது மனம் ஆறுதல் கொள்ளாது தவிக்கின்றதே. காட்டில் உள்ள தேன்கூடு (வதை) தேன் உண்டபின்னர் அங்கு வீசிய பெருங்காற்றினாலும் மழையினாலும் பொத்தென்று கீழே விழுந்து யாருக்கும் பயன்படாதது போன்று எனது நெஞ்சமும் கலங்குகின்றதே! என் செய்வேன். அவன் ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல பல நாட்கள் வந்து என்னோடு பேசி என்னை மகிழ்வித்தவன் ஏன் வரவில்லை என்று அறியாது என்மனம் துடிக்கின்றதே எனத் தோழியிடம் கூறுகின்றாள். நெஞ்சம் துடிக்கின்றதே நிதானம் இழக்கின்றதே என்செய்வேன் தோழி எனத் தனது மனம்படும் வேதனை அவள் தோழியிடமன்றி யாரிடந்தான் சொல்லுவாள்.

இதோ நெய்தலில் சங்கப் பாடல்
ஒருநாள் வாரலன், இரு நாள் வாரலன்
பல் நாள் வந்து பணி மொழி பயிற்றி என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனின் போகியோனே
ஆக ஆகு எந்தை யாண்ணாடு ஊன்
கொல்லோ?



வேறு புலன் நல்நாட்டுப் பெய்த
எறுடை மழையின் கவிழும் என் நெஞ்சே!
என்னும் நெய்தல் திணையின் காதலால் சிக்குண்டு தவிக்கும் தலைவின் வாயிலாக எடுத்தியம்புகன்றார் புலவர் வருமுலையாரித்தி குறுந்தொகையில்.

தலைவனும் தலைமகளும் கடற்கரையோரத்தில் ஊர் ஒதுக்குப்புறமாக யாருமறியாமல் சந்தித்து வரும் களவொளுக்கத்தை நவீன சினிமாத்துறை நன்கு கையாண்டுவருவதனையும் சில பாடல் வரிகளால் அறியக்கிடக்கின்றது.

அலைபாயும் கடலோரம்
இளமான்கள் போலே
விளையாடி.... இசைபாடி...
விழியாலே உறவாடி
இன்பம் காணலாம்
எனச் சுசீலாவின் குரலில் கடலோரமா அமைந்துள்ள காதல் காட்சியின் பாடலை நினைவூட்டுகின்றது. மேற்படி சங்கப்பாடல்.

## சங்க இலக்கியத்தில் காதல்

உதாரணமாக வருமுலையாரித்தியின் இக்குறுந்தொகைப் பாடல் - தலைவன் நினைவில் உள்ள தலைவி அவனைக் குறித்து பின்வருமாறு சொல்கிறாள் - அவன் ஒருநாள் வந்தவனல்ல. இரண்டு நாட்கள் வந்தவன் அல்ல. பல நாட்கள் வந்து

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



# அறு சுவைகளின் அரசன்
# இல்லத்தரசிகளின் முதல் தெரிவு




**NIRU BRAND**

தயாரிப்புக்கள்

தரத்தில் சிறந்தவை தமிழ் கடைகளில் கிடைக்கும்

Niru Niru
நிரு பிராண்ட்

**416.750.1976**

# GAS STATIONS/BUSINESSES FOR SALE



**Colombia Way/ Hwy 50**
Sale Of Business
Without Property
Gas Stations
$269,000
Golden Opportunity To Own Operate Family Gas Bar In Gta.




**Peterborough**
Sale Of Business
With Property
Convenience/Variety
$395,000
Excellent Location, Rare Opportunity To Own & Operate A Well Established (35 Yrs) Branded C Store, "Daisy Mart".

**GAS STATION**

**Minden Hills**
Sale Of Business
With Property
Gas Stations
$495,000
Well Established Enroute Stop Over On Busy Hwy 503 Connects Gas Station

**Beauty Salon With Property**



Well Established Beauty, Spa & Salon In A Busy High Traffic Indoor Mall
$388,00
Plus Stock



**Waterloo**
**Beverly/Wellingto**
Sale Of Business
With Property
Gas Stations
$1,250,000
Plus Stock
Busy Corner Location Next To City Hall Surrounded By Appts& Houses, Lots Of Walk In Loyal Customer



**Kingston**
**Division St /Benson St**
Sale Of Business
With Property
Gas Stations
$1,798,000
Plus Stock
Well Established And Maintained Busy Shell Gas Station In Fast Growing Kingston City



**Brantford**
**King George Rd/Highway**
Sale Of Business
With Property
Gas Stations
$1,999,999
Plus Stock
Excellent Opportunity To Own A # 1 Branded Esso Otr Gas Station In Urban Town



## Nel Ketha
Sales Representative
**416.677.4707**

Smart Real Estate Solutions

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member




100% GUARANTEED

Malayal Bhagawathi Joythidam
(From Kerala)

- கைரேகை
- தொழில் வியாபாரம்
- குடும்ப பிரச்சினைகள்
- கணவன் மனைவி ஒற்றுமை
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- திருமண யோகம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- களவட நஷ்டங்கள்
- கல்வி, உத்தியோகம்
- நீதிமன்ற வழக்குகள்
- குழந்தை பாக்கியம்
- சர்ப்ப தோஷம்

**Pandit Tulsidhar Swamiji: 647.856.0559**

GTA Square Mall (2nd Floor), 5215 Finch Ave. E., # 257 Scarboough ON M1S 0C2

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

**Vany Jeganmohan**
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962

GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"

**Schuren Sriskandarajah** B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

TD Canada Trust வங்கியில் அனைத்து Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
Low Mortgage Rates
ADVICE WHEREVER WHENEVER

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்....
*VK Kanthasamy*
Sales Representative
Cell: 416-726-1698
*Let Me find the key to your HoMe!*
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

**Free Real Estate Class** - Call: 416.321.6969

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com


## RealEstate / Mortgage / Commercial Investments



BOVAIRD & SANDALEWOOD (BRAMPTON)
Bedroom : 4 + 1
Washroom: 3
Price : $449, 900



BALDWIN & WINCHESTER (WHITBY)
Bedroom : 3
Washroom: 4
Price : $398,000



HOOVER PARK & 9TH LINE (STOUFFVILLE)
Bedroom : 4
Washroom: 3
Price : $569,900



FREELAND & LIBERTY ST (COURTICE)
Bedroom : 4
Washroom: 3
Price : $339,900



WESTNEY & ROSSLAND (AJAX)
Bedroom : 4
Washroom: 3
Price : $339,900



MARKHAM & 16 TH AVE
Bedroom : 3
Washroom: 2
Lease : $599,000


MORTGAGE ALLIANCE
RE/MAX Dynasty Realty Inc.

**A. Anton Jeeva** B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
**Raj Paramasamy**
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
RE/MAX All-Stars Realty Inc., Brokerage
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result

MORTGAGE ALLIANCE The Guardian
Mortgage In Trouble?
Need a Mortgage?
- Residential & Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity Loan

We're Hiring New Agents

**Gini Annarasa**
Mortgage Broker Lic: #M08005550
Email: gini.annarasa@gmail.com
Cell: 416.830.3241
80 Nashdene Rd., Unit D 221-22 Toronto ON, M1V 5K4
Tel: 416.558.7002 Fax: 416.558.5115
Toll Free: 1 877.338.3487
Franchise Of The Mortgage Alliance Network Lic # 12521
*Independently Owned & Operated

Sales Reps. Welcome
**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED